www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகை பதிவு செய்யப்பட்டது. Registered sa a Newspaper at the GP

# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 48 | 15 ஆடி 1999 | விலை: ரூபா 7.00










# மன்னார்-விடத்தல் தீவு மானிடப்பேரவலம்

இலங்கை இராணுவத்தின் ரணகோஷ-4 ஆரம்பித்ததிலிருந்து விடத்தல் தீவு, அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் பேரவலத்தின் பிடியில் சிக்கியுள்ளார்கள்.

இவர்களின் நூற்றுக்கணக்கானவர்கள் விடத்தல் தீவின் ஞானப்பர் தேவாலயத்திலும், சென்மேரிஸ் தேவாலயத்திலும் அடைக்கலம் புகுந்திருந்தார்கள் அவர்களின் உயிர்வாழ்கை யுத்தத்தின் கோரப்பிடியில் கேள்விக்குரியதாகிய நிலையில் அவர்கள் மூண்டாம் பிட்டி வழியாகவும், இலுப்பைக்கடவை வழியாகவும் கடல்மார்க்கமாக பள்ளிமுனைக்கு வருகிறார்கள். யூலை 8வரை சுமார் 1600 பேர் அகதிகளாக வந்துள்ளார்கள். தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள். மொத்தம் 3500 பேருக்கு மேல் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

தரைவாழி மாத்திரமல்லாமல் படகு மூலம் மக்கள் இடம் பெயர்வது வியட்னாமிய படகு அகதி மக்களை ஞாபகப்படுத்துகிறது. தாம் பல ஆண்டுகளாக சேர்த்த, உழைப்பில் உருவாக்கிய வீடு, வலை, வள்ளம், கால்நடைகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உடுத்த துணியுடன் மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்.

வடகிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெரும்பாலான மக்கள் இத்தகைய அவலங்களை பலதடவை சந்தித்துள்ளார்கள்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களும், விடத்தல் தீவில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்தவர்களும் இதில் அடக்கம்.

இவ்வாறு பள்ளிமுனை வரும் அகதிமக்களை பள்ளி முனை லூசியா தேவாலய நிர்வாகசபையான் குருஸ் அவர்களும், பள்ளிமுனை மக்களும் ஆதரித்து உதவுகின்றனர். அங்குள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணினர் தம்மால் இயன்றவரை தேவாலய நிர்வாகத்துடனும், மக்களுடனும் இணைந்து துயர் துடைப்பு பணிகளில் ஈடுபட்டனர். அதேபோல் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் தம்மால் இயன்ற உதவிப்பணிகளை மேற்கொண்டன.

நாளாந்தம் தொடர்ந்து 150-200 பேர் வரை மக்கள் அகதிகளாக வந்துகொண்டிருக்கின்றனர்.

உடனடி உதவியாக தேவலய நிர்வாகம் சமைத்த உணவும், இருப்பிடமும் வழங்குகிறது. பின்னர் மன்னார் செயலக அதிகாரிகள், ஊழியர்கள் பேசாலைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

தமிழ் மக்களின் வாழ்வு யுத்தம் நடைபெறும் பகுதிகளில் எல்லாமே இவ்வாறு சூனியத்தை, இருளை நோக்கியதாகத் தான் இருக்கின்றது.

ஒரு பலவீனமான, கையறு நிலையில் இருக்கும் ஒரு சமூகமாக எமது சமூகம் மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. திட்டமிட்டோ என்னவோ இது நடந்து கொண்டுதான் இருக்கிறது.

**இப்படி அகதிகளாகவே மக்களை பாராமரிப்பதில் ஈடுபடப் போகிறோமா அல்லது யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவும், தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும், கௌரவத்துடனும் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க அனைத்துக்கட்சிகள் இயக்கங்கள், தமிழ் மக்களின் நலன்விரும்பிகள் இணைந்து செயற்படப் போகின்றோமா?என்பதே இன்று எம்முன் உள்ள முக்கிய கேள்**




# அரசியலை விட்டு வெளியேறுக!

## புலிகள்-த.வி.கூ க்கு அறிவுப்ப

ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் ஆயுதக் குழுவான தமிழீழ விடுதலைப்புலிகள், அங்குள்ள மித்வாதக் கட்சியான த.வி.கூ யை அரசியல் அரங்கில் இருந்து வெளியேறும் படி வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களது

அண்மைய தடையானது, கூட்டணியை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்காக அதன் மீது புலிகள் பிரயோகிக்கும் நிர்ப்பந்தத்தின் ஒருபகுதியே எனக் கூட்டணியின் உயர்மட்டம், "ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்"க்கு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் லண்டனில் நடைபெற்ற உத்தியோகப்பற்ற கூட்ட

பிரபாகரன் எந்தளவுக்கு கூட்டணியின் தலைமைப்பீடத்துடன் அதிருப்தி கொண்டுள்ளார் என்பதை கூட்டணியினருக்கு புலிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழர்களது பிரச்சினையை உயர்த்திப் பிடிப்பதாகவும் புலிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் அதே வேளை, உண்மையில் சிங்கள பேரினவாத சந்திரிகா குமாரதுங்கா அரசினைத் தாங்கிக் கொண்டும் தந்திரமாக புலிகளுக்கு எதிராக அது மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்துக்கொண்டும், நடித்துக் கொண்டிருக்கின்ற ஒரு சந்தர்ப்பவாதக்கட்சியாகவே கூட்டணியினரை பிரபாகரன் கருதுகிறார்.

தமிழர்களையும் புலிகளையும் திருப்திப்படுத்துவதற்காக கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறி

**தமிழர்களையும், புலிகளையும் திருப்திப்படுத்துவதற்காக கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்காவினது பாதுகாப்பு வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கின்றனர். ஆனால் அதேவேளை, வழக்கமாக மொத்த வரவு செலவுத்திட்டத்திற்கு வாக்களித்து அரசாங்கம் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்துக்கொள்கிறார்கள்.**

படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்

# நாடு பயங்கரத்தை நோக்கி.....

1958, 1977, 1980, 1983 போன்ற தொரு சூழ்நிலையை உருவாக்க பேரினவாத சக்திகள் மீண்டும் கங்கணம் கட்டியுள்ளன.

மலையகத்தில் இ.தொ.காவின் மேதின ஊர்வலத்தில் குழப்பம் விளைவித்த சிங்கள வீரவிதன கொழும்பில் இ.தொ.க தலைமைக்காரியாலயத்தில் காங்கிரசின் கொடியை இறக்கி எரிக்கும் அளவுக்கு சென்றது.

ஆனால் இந்த பாரதூரமான சம்பவம் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகள் எதுவும் அரசு தரப்பினால் மேற்கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை.

அன்மைக்காலத்தில் எழுத்து, பேச்சு மூலம் இனவாத விஷம் கக்கப்பட்டு வருகிறது. சில குறிப்பிட்ட தொலைக்காட்சிகள், சிங்கள, ஆங்கிலப்பத்திரிகைகள் இந்த இனவாத இயக்கங்களின் பிரச்சாரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றமை கவனிக்கத்தக்கது.

மலையக முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்முறைகளும் ஆங்காங்கே நடைபெற்றுள்ளன. யுத்தத்தில் மடியும் ஏழைச்சிங்கள கிராம இளைஞர்கள் பற்றியோ அல்லது எல்லைக்கிராமங்களில் சொல்லொணா வேதனைகளை அனுபவிக்கும் மக்கள் பற்றியோ இந்த சக்திகளுக்கு எந்த அக்கறையும் கிடையாது. ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத கதையாகத்தான் இவர்களின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

நடைபெறும் யுத்தத்தில் ஓடும் ரத்தத்தில் குளிர்காய்ந்து எதையாவது சுருட்டிக்கொள்ளலாமா என்றுதான் இவர்கள் சந்தர்ப்பம் பார்த்திருக்கிறார்கள்

சிங்கள வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி ஆகியவற்றிற்கு பாதாள உலகக் கோஷ்டிகளும், ஏனைய சமூகவிரோத சக்திகளுமே பக்கபலமாக இருக்க முடியும்.

பெருவாரியான சிங்கள மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை கொழும்பு பல்கலைக்கழகம் நடத்திய கருத்துக்கணிப்பு புலப்படுத்தியுள்ளது.

60சத வீதமான மக்கள் இந்த நாட்டில் சமாதான பூர்வமான அரசியல் தீர்வு ஒன்றையே விரும்புகின்றார்கள். இந்த நிலையில் அரசு தயக்கம் காட்டாது இனவாத சக்திகளுகெதிராக தீவிர நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

ஆளும் கட்சிக்குள்ளும், பிரதான எதிர்க்கட்சிக்குள்ளும் இத்தகைய சக்திகளை உற்சாகப்படுத்தும் பேர்வழிகள் இருப்பதாகவே கருதப்படுகிறது.

1983ல் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமானகரமான கொடுமைகள் அதில் சம்பந்தப்படாத சிங்கள மக்களை ஒன்றரைத் தசாப்தத்திற்கு மேலாக தலைகுனிய வைத்தது.

இதற்கிடையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ரில்வின் சில்வா அவர்கள் இந்த இனவாத சக்திகளை கண்டித்து அறிக்கை விடுத்துள்ளதோடு மக்களை விழிப்பாக இருக்குமாறும் கேட்டுள்ளார். உண்மையில் இந்த அறிக்கை இந்த நாட்டு தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கு தென்பூட்டக்கூடியதொன்று. அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தாலும்?? அதற்கெதிரான குழப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்த சக்திகள் ஆயத்தம் செய்து வருகின்றன.

மறுபுறம் இந்த இனவாத சக்திகளை தூண்டிவிடும் விதமாக புலிகள் அப்பாவிச் சிங்கள மக்களுக்கெதிரான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அம்பாறைக்கு அண்மையாக மேற்கொள்ளப்பட்ட குரூரத்தனமான தாக்குதல் அத்தகையதொரு முயற்சியாகும். இந்த நடவடிக்கை பேரினவாதத்தை கெட்டிப்படுத்தும் நடவடிக்கையாகும்.

இத்தகைய சக்திகளுக்கெதிராக இந்த நாட்டையும் இந்நாட்டின் அனைத்துப்பிரிவு மக்களையும் நேசிக்கும் சக்திகள் ஓரணியில் திரளவேண்டும்.

# மன்னார் ஆதார வைத்திய சாலையின் அவலநிலை

மன்னார் ஆதாரவைத்தியசாலை இந்த நாட்டில் போர் உக்கிரமாக நடைபெறும் ஒருபரந்த பிரதேசத்திற்குச் சேவையாற்ற வேண்டியது. அடிக்கடி மரணங்களும், அங்கவீனர்களும் உருவாகிக் கொண்டிருக்கும் இடம். போசாக்கின்மை, பட்டினி சுகாதாரச் சீர்கேடு ஆகியவற்றுடன் போராடிக்கொண்டிருக்கும் இடம் பல்லாயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து கொண்டிருக்கும் இடம். ஆனால் அதன் இலட்சணம் கீழ்க்கண்டவாறுதான் இருக்கிறது.



வைத்திய சேவைகளை வழங்க முடியாத நிலையில் மன்னார் ஆதாரா வைத்தியசாலை

### நிரந்தரமான மாவட்ட வைத்திய அதிகாரி

நிரந்தரமான மாவட்ட வைத்திய அதிகாரி எமது ஆதாரவைத்தியசாலைக்கு இல்லாமை காரணமாக பல நிர்வாகச் சிக்கல்களைத் தொடர்ந்து சந்திக்கவேண்டியுள்ளது.

### தாதிமார்

77 தாதிமார் வேலைசெய்ய வேண்டிய இடத்துக்கு 20 நிரந்தரத்தாதிமாரும் இரண்டு தற்காலிகத்தாதிமாருமேயுள்ளனர்.

அறுவைச் சிகிச்சை நிபுணர் மகப்பேற்று நிபுணர் இவர்கள் இல்லாத காரணத்தால் இவை சம்பந்தமன சகல நோயாளர்களையும் வவுனியாவுக்கும், அங்கிருந்து அனுராதபுரத்துக்கும் அனுப்ப வேண்டியுள்ளது.

### நிரந்தரமற்ற வைத்திய அதிகாரிகள்

தற்போது நடைபெறுகின்ற நியமனங்கள் யாவும் ஆறு மாதத்திற்கொரு தடவை இடம் பெறுவதால் அவர்கள் எமது தமிழ்மொழியைக் கற்று முடிப்பதற்குத் தான் சரியாக உள்ளது.

ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர்கள் ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான ஆளணி 6, ஆனால் 2 தொழில் நுட்பவியலாளர்கள் சராசரி 150 உள் வெளி நோயாளர்களைப் பார்க்க வேண்டியுள்ளது.

★ ஆய்வு கூடத்தில் பயிற்றப்பட்ட உதவியாளர் இல்லை.

★ பழுதடைந்த நிலையில் இருக்கும் ஆய்வு கூடக் கருவிகள்.

உதாரணம்:- Electric Balance

தொழில் நுட்பவியலாளர்கள் அற்று இருக்கும்

### எக்ஸ்ரே பிரிவு

திருமதி டேவிட் அவர்கள் கனடா சென்ற பின் எந்த ஒரு தொழில் நுட்பவியலாளரும் நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் நோயாளர் பணம் கொடுத்து எம்.ஓ.எச் அவர்களின் தனிப்பட்ட எக்ஸ்றே மூலம் தேவையை நிறைவு செய்ய வேண்டியுள்ளது.

### நியமனங்கள்

(அ) வடகிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் திரேசா அவர்கள் எமது மாவட்டத்திலிருந்து தாதியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோரை எமது மாவட்டத்திற்குப் பணி செய்ய அனுப்பாமல் வெளிமாவட்டமாகிய வவுனியா, யாழ்ப்பாணம் போன்றவற்றிற்கு அனுப்ப சம்மதிப்பது எமது தாதியர் பற்றாக்குறைக்கு ஒரு காரணம்.

(ஆ) எமது சிற்றூழியர்கள் நேர்முகப் பரீட்சை அண்மையில் மன்னார் வவுனியாவில் நடைபெற்றமை அறிந்ததே. அவர்களைத் தெரிவு செய்து சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

(இ) ஏனைய அதிகாரிகள் நியமனம் சம்பந்தமாக டி.பி.டி.எச்.எஸ் வவுனியா அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்களை வடகிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சின் பிரிவுக்கு அவர் சிபார்சு செய்யலாம்.

(ஈ) அரசாங்க சேவையில் பணியாற்றும் வைத்திய அதிகாரிகள் தனியார் சேவையும் செய்வதால்தான் பல சிரமங்கள் நிலவுகின்றன. எம்.ஓ.எச் அதிகாரி இந்த இரண்டு சேவை செய்வது குறிப்பிடத்தக்கது. புதிய எம்.ஓ.ஏச் அதிகாரி ஒருவரை நியமிப்பது சுகாதார சேவைகள் அமைச்சுக்கு நன்மை பயக்கும்.

ஏ. அந்தோனிப்பிள்ளை, மன்னார்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது.

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

E.P.I.C., Box No: 95, 95144, GargesLes, Gonnesse Cedex, France.

B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K.

P.Fach: 506, Bern-17, Switzerland.

Post Bag: 1041, Madras-17, India.

P.Fach: 66, 59514 Welver, Germany.

54. மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை. ☎ 026-22858

310. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021-2022

பள்ளிமுனை வீதி, உப்புக்குளம். மன்னார். ☎ 023-2370

29A. வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-22398

22. வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-22724

மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epic-vu@sltnet.lk - Vavuniya
epiclondon@gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**Web site Address: http://www.epicnews.com**

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!....

## அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

பொது ஜன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஆகஸ்ட் மாதத்துடன் ஐந்து வருடம் பூர்த்தி அடைகின்றது. அமைதி, சமாதானம், ஜனநாயகம் ஆகியவற்றை உருவாக்குவேன் என உறுதிமொழி கொடுத்து பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள், எதனையுமே செய்ய முடியாத கையறு நிலையிலேயே உள்ளார்.

1994ம் ஆண்டு பதவி ஏற்றவுடன் பேச்சுவார்த்தை என்ற ஓர் நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஆனால் அப்பேச்சுவார்த்தை முறிந்ததுடன் பேச்சுவார்த்தைக்கும் மூடு விழா நடாத்தப்பட்டு விட்டது.

புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை, அவர்கள் யுத்தத்திலேயே குறியாக உள்ளார்கள் எனவே புலிகளை அழித்து சமாதானத்தை உருவாக்குவேன் என்று கூறிய ஜனாதிபதியவர்கள் இப்பொழுது ஐந்தாவது வருடமாக யுத்தத்தை நடாத்திக்கொண்டிருக்கின்றார்.

**மக்களின் துன்பத்தைப் பற்றிக் கவலைப்பட அரசுக்கும் நேரமில்லை, அவர்களது விடுதலைக்காகப் போராடும் புலிகளுக்கும் நேரமில்லை. இன்னும் சொல்லப் போனால் மக்களின் துன்பத்தையே இருபகுதியினரும் தமது போர்க்கருவிகளாக பயன்படுத்துவதாகவே தோன்றுகின்றது. மக்களை பட்டினி போட்டால் புலிகள் மேல் விரக்திகொண்டு மக்கள் தமது பக்கம் வருவார்களென இராணுவம் நம்புகின்றது. அதேபோல் மக்களுக்குகிடைக்கும் அற்பசொற்ப உணவுப் பொருட்களையும் புலிகள் தமதாக்கிக்கொண்டு, அரசுக்கெதிராக திருப்பமுடியும் என்று யோசிக்கின்றது. மொத்தத்தில் மக்களைப் பட்டினி போடுவதிலேயே இருதரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக ஈடுபட்டுள்ளார்கள்.**

இந்த யுத்தத்தினால் ஏறத்தாழ:


- ★ 75, 000 மக்கள் இறந்துள்ளார்கள்.
- ★ 8, 50, 000 மக்கள் அகதிகளாக இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியாவில் குடியேறியுள்ளார்கள்.
- ★ பல இலட்சம் பேர் உள்ளூரிலேயே அகதி வாழ்க்கை வாழ்கின்றார்கள்.
- ★ ஒரு தரம், இரண்டு தரம் அல்ல ஆறுக்கு மேற்பட்ட தடவைகள் கூட இடப் பெயர்வு ஏறத்தாழ அகதி வாழ்க்கை.
- ★ கல்வி, சுகாதார வசதிகள் பாரியளவில் சீரழிந்து விட்டது.
- ★ அழிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி அளவிடமுடியாது.
- ★ வட-கிழக்கெங்கும் "பாஸ் கெடு பிடிகள்"
- ★ போக்கு வரத்தில்லை, மின்சாரம் இல்லை, தொலைத் தொடர்பு வசதிகள் இல்லை.

இவை தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஸ்ரத்தின் ஒரு பகுதியே. இதனை நிறுத்த வேண்டும் என்ற நோக்கம் அரசுக்குமில்லை, புலிகளுக்குமில்லை என்பதுதான் வருந்தத் தக்கது.

மக்களின் துன்பத்தைப் பற்றிக் கவலைப்பட அரசுக்கும் நேரமில்லை, அவர்களது விடுதலைக்காகப் போராடும் புலிகளுக்கு நேரமில்லை. இன்னும் சொல்லப் போனால் மக்களின் துன்பத்தையே இரு பகுதியினரும் தமது போர்க்கருவிகளாக பயன்படுத்துவதாகவே தோன்றுகின்றது.

மக்களை பட்டினி போட்டால் புலிகள் மேல் விரக்தி கொண்டு மக்கள் தமது பக்கம் வருவார்களென இராணுவம் நம்புகின்றது. அதேபோல் மக்களுக்கு கிடைக்கும் அற்ப சொற்ப உணவுப் பொருட்களையும் புலிகள் தமதாக்கிக் கொண்டு, அரசுக்கெதிராக திருப்பமுடியும் என்று யோசிக்கின்றது. மொத்தத்தில் மக்களைப் பட்டினி போடுவதிலேயே இருதரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக ஈடுபட்டுள்ளார்கள்.

இது ஒரு புறமிருக்க மறு புறத்தில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி இன்று ஜனநாயகப் பாதைக்கு வந்துவிட்டதாக கூறிக் கொள்ளும் கட்சிகள் மத்தியில் கூட ஐக்கியமுமில்லை, குறைந்த பட்சம், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுக்கக் கூட இவர்கள் ஒன்றுபட மாட்டார்கள் என்பதே யதார்த்தமாகிப் போயுள்ளது.



தமிழ் மக்களின் உரிமைகள் என்பதிலும் விட குறுகிய அரசியல் இலாபங்களும், ஒவ்வொரு இயக்கமும் தாம் ஓர் குறுநில மன்னர்கள் என்ற அகங்காரமும், வரி,வட்டி வசூலிப்பவர்களாகவும், தமது ஆளுமையை உறுதிப்படுத்த ஒருத்தரை ஒருத்தர் உடல் மீதியின்றி கொன்றொழிப்பவர்களாகவுமே மாறியுள்ளனர். ஆனால் ஐக்கியம் வேண்டுமென்றே பசப்பு வார்த்தைகளை அடிக்கடி உச்சாடனம் பண்ணிக்கொள்வதில் இவர்கள் சூரர்களாக உள்ளனர்.

. இயக்கங்கள் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்க வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் பல தடவை முயற்சித்தது. பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்தியது. இறுதியில் ஐக்கியத்தையும், யுத்தத்தையும் வலியுறுத்தி 2.6.99 அன்று 6000க்கு மேற்பட்ட மக்கள் கலந்த கொண்ட மாபெரும் பேரணி ஒன்றையும் வவுனியாவில் நடாத்தியது. ஐக்கியத்துக்கான மக்களின் ஏகோபித்த உணர்வை அந்த மாபெரும் பேரணி அன்று வெளிக்காட்டி நின்றது.

ஆனால் மக்களுக்கேற்பட்ட உணர்வு இன்றும் இயக்கங்களுக்கு ஏற்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

அரசைப் பொறுத்தவரை புலிகளை இராணுவரீதியில் மிகவும் பலவீனப்படுத்தி, ஏனைய இயக்கங்களையும் கையாலாகதவர்களாக மாற்றிவிட்டால் அவர்களுக்குப் போதுமானது.

அரசாங்கத்தின் இத் திட்டத்தை புரிந்து கொள்ளாமல், அதன் பொறிக்குள் புலிகள் உட்பட சகல தமிழ்க்கட்சிகளும் அகப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு, என்று அதிலிருந்து விடுபட முயற்சிக்கின்றார்களோ அன்றுதான் தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியம் ஏற்படும்.

தமிழ்க்கட்சிகள் மத்தியில் ஐக்கியம் வேண்டும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளும் புரிந்து கொள்ள வேண்டும். அரசாங்கம் பாரியளவில் நிலப்பரப்புக்களை கைப்பற்றி தனது ஆளுமையை விஸ்தரிக்க முயற்சிக்கும் பொழுது, குறைந்த பட்சம் ஏனைய இயக்கங்கள் ஜனநாயக வழியிலான, சாத்வீக வழியிலான போராட்டங்களை நடாத்துவதன் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சூழலாவது நிலவவேண்டும்.

அதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும். அதனை விடுத்து "துரோகிகளே எம்முடன் இணையுங்கள் என்பதும், இல்லையேல் கொண்றொழித்துவிடுவோம் என்பதும், புலிகளின் ஜனநாயக விரோத நிலைப்பாட்டையே காட்டுகின்றது. இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பலவீனமாகிப் போய்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழ் இயக்கங்கள், இந்த நிமிடத்திலாவது தமிழ் மக்களுக்காக ஒன்றுபட வேண்டும். இல்லையேல் வரலாறு எம்மை மன்னிக்காது.

அன்புடன்
சுரேஷ்

# தியாகம் என்பது செத்து மடிவது அல்ல

## கரும்புலிகளுக்கோர் திறந்த மடல்!



உயிரை இழக்கச் சித்தமாயுள்ள உத்தமர்களே! அண்ணனின் ஆணைக்கு அடங்கி செய்து முடிக்கவும், செத்து மடியவும் காத்திருக்கும் கண்ணியவான்களே! உணர்ச்சிகளால் முறுக்கேற்றப்பட்டுள்ள உள்ளங்களின் சொந்தக்காரர்களே! இலக்குகளைத் தேடி அழிப்பதையே இலக்காகக் கொண்டு உறுதியுடன் உழைக்கும் செம்மல்களே! காற்றும் புக முடியாத பாதுகாப்புக் கோட்டைகளுக்குள்ளும் புகுந்துவிடும் வழி தேடும் உறங்காத விழிகளே! உருமறைத்து தலைமறைந்து வாழும் உங்களுடன் ஒரு கணம் பேசவிரும்புகின்றோம்.

இலக்குகளை தேடுவதிலும், உருமறைந்து வாழ்வதிலும் சங்கடங்களைச் சந்திக்கும் உங்களுக்கு சில சமயங்களில் சிந்திக்கவும் கால அவகாசம் வாய்க்காமல் இருக்கக் கூடும். எனவே தான் உங்களுக்காகச் சிந்தித்த சிலவற்றை பகிரங்கமாக எடுத்துக் கூற ஆசைப்படுகின்றோம்.

### தற்கொலையாளிகளே!

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் 1987ன் ஜூலை 5ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் முகாமிட்டிருந்த படையினர் மீது கப்டன் மில்லர் நடத்திய தற்கொலைத் தாக்குதலின் மூலம் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் கட்டிடங்கள் தகர்ந்தது. பல நூறு படையினரின் உயிர்கள் பறிக்கப்பட்டது. இது மட்டுமன்றி இராணுவத் தாக்குதல் மூலம் ஆயுத மேந்திய எதிர்ப்பு இயக்கம் அடக்கப்பட முடியாதது என்ற செய்தியும் எடுத்துரைக்கப் பட்டது.

கொழும்பு புதுடில்லியிடம் சரணடைய வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. வடமராட்சி எங்கும் வியாபித்த படைமுகாம்களுக்கு மூடுவிழா நடத்தும் நிர்ப்பந்தம் உருவானது. அதன் பின்னர் மேஜர் டாம்போ உயிர் கொடுத்தது மூலம் சிலாபத்துறை இராணுவ முகாமும், லெப்டினன்ட் கேணல் போர்க்கின் வெடி மருந்து பொதி வெடித்ததன் மூலம் மாங்குளம் இராணுவ முகாமும் இருந்த இடம் தெரியாமல் போக வைக்கப்பட்டது.

இவற்றை எல்லாம் இராணுவ ரீதியான சாதனைகள் என்றெண்ணி மகிழும் நீங்கள், உங்கள் உயிர்களைக் கொடுப்பதன் மூலம் விடுதலைப்போராட்டப் பாதையில் மேலும் ஒருபடி முன்னேறலாம் என நம்பியிருக்கக்கூடும்.

ஆனால் அது உண்மையா? இந்தக் கேள்வியையிட்டு ஒரு கணம் ஆழமாக சிந்தியுங்கள். இதுவரை

முகமே தெரியாமல் அடையாளமே இல்லாமல் சாவை அணைத்துக் கொண்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. இந்த உயிரிழப்புக்கள் மூலமாக பெறப்பட்டுள்ள பெறுபேறு என்ன? எந்தப் படையினரையும், அரசாங்கத்தையும், உங்கள் எதிரிகளாகக் கருதுகிநீர்களோ அந்த அரசாங்கத்தினதும், படையினரதும் பாதுகாப்புக்குள் வாழ்வது புத்திசாலித்தனமானது எனச் சாதாரண மக்கள் எண்ணங் கொள்கின்றனர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

### அன்புக்கு இனியவர்களே!

உங்களுடைய உயிர்களும், வாழ்க்கையும் தலைவர்களுக்கு ஆயுதமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், உங்களது தந்தை தாயாரும், உற்றார் உறவினர்களும், நண்பர்களும், தோழர்களும் விரும்புவது அனைவரும் சம அந்தஸ்துடன் வாழவேண்டும் என்பதையே. அதற்காக நிகழ்காலத்தைப் பணயம் வைத்து போராடப் புறப்பட்டீர்கள். எப்படியாவது செத்துத் தொலைய வேண்டும் என்று எண்ணியிருந்தால் நீங்கள் போராட்டப் பாதையை தெரிவு செய்திருக்க மாட்டீர்கள் தானே.

எனவே கொன்று ஒழிப்பதும், செத்து மடிவதும் தான் போராட்டம் என்ற எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள் என விநயமாக

என்பவன் வாழப் பிறந்தவன் என்பதால் வாழ்வை நேசியுங்கள் சமரசங்களும், விட்டுக்கொடுப்புக்களும் செய்யாவிட்டாலும் சக மனிதனுடன் நேசமாக வாழமுடியும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இந்த இடத்தில் சீனப்பெருந்தலைவர் மாஓ.சே.துங்கின் மேற்கோள் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட ஆசைப்படுகிறோம். தியாகம் என்பது செத்து மடிவது அல்ல. மக்களினதும், மண்ணினதும் நல வாழ்விற்காக எத்தகைய இடர்களையும் சுமந்த படி வாழ்வதுதான். என்பது அவரது கூற்று. விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்பட்டு மரணத்தை நீ விரும்புவாயின் அது தற்கொலையாகவே இருக்கக்கூடும்.

எந்தப் பெரிய இலட்சியங்களை விடவும் மனிதனின் வாழ்வு மகத்தானது. மனிதனது வாழ்வைத் தியாகத்தின் பெயராலோ, துரோகத்தனம் என்ற குற்றச்சாட்டாலோ பறிக்க முற்படுவது மக்களின் பொது நலனுக்கு பொருத்தமானதாக இருக்காது.

### சாவை அணைக்கச் சித்தமாயுள்ளவனே!

ஒரு நிமிடம் சிந்தி. சாவு என்பது மனிதனாக பிறந்த ஒவ்வொருவனுக்கும் எப்போதோ ஒரு நேரத்தில் சந்திக்க வேண்டியது ஒன்றே. எந்த நேரத்தில் எந்த வடிவத்தில்

சாதாரண மக்களுக்குத் தெரியாதது. அதனால் தான் மரண பயம் மனித வாழ்வை ஆட்டிப்படைக்கிறது.

ஆனால் வாழ்தலின் மீது ஆசை அறுத்து சாவை சுமந்து கொண்டு இலக்குகளை தேடித்திரியும், நீயும் உன்போன்றவர்களும், அழிவைத் தவிர, வேறெதையும் ஆக்கப்பூர்வமாக செய்யப்போவதில்லை என்பதை மிகவும் காலம் தாழ்ந்து போயுள்ள இன்றைய நிலையிலாவது உணர்ந்து கொள்ள வேண்டுமென விரும்புகின்றோம்.

தன்னலம் கருதாமல் மண்ணையும், மக்களையும் நீ நேசிப்பது உண்மையானால் பொது நலன் கருதி பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதான வழிவகைகள் பற்றித் தேடும்படி அன்புடன் வேண்டுகின்றோம். சாவு எப்போதும் வரலாம். ஆனால் வாழ்வு.....? வாழ்வதற்காகவே பிறந்தோம். அடிமை விலங்குகள் அனைத்தையும் அறுத்தெறிந்து வாழவே பிறந்தோம்.

அடிமை விலங்குகள் அனைத்தையும் அறுத்தெறிந்து வாழவே பிறந்தோம். என்று உரத்த குரலில் முழக்கமிட வா என்று பாசமுடன் வரவேற்கிறோம்.

சிவலிங்கம்

படிப்பகம்

www.padippakam.com



# இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதிச் சந்தர்ப்பம்?

தமிழ்ச் சமுதாயகத்தின் இன்றைய நிர்க்கதி நிலை கருத்திற்கெடுக்கப்பட்டு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியது ஒரு வரலாற்று அவசியமாகும் அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் எமது சமுதாயத்தின் அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான அழுத்தங்களை சம்பந்தப்பட்ட தரப்பிரனருக்கு கொடுப்பது எமது கடமை. சமூகத்தின் அரசியல் கட்சிகள் சமுகசேவை ஸ்தாபனங்கள், பொறுப்பு வாய்ந்த பிரசைகள் எல்லோருக்கும் இந்த கடமை உண்டு.

வெறுமனே பிரச்சினை பிரச்சினை என்று பேசிக்கொண்டிப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை. தமிழ்மக்களுக்கு என்ன பிரச்சினை என்பதை தமிழ்மக்களே எடுத்துரைக்க வேண்டும். அல்லது இரட்சகர்கள் வருவார்களா? என கனவுகண்டுகொண்டிருக்கவும் முடியாது.

50 ஆண்டுகளாகத்தானே சொல்லிவருகிறோம் காரியம்தான் நடக்கவில்லை புதிதாக என்ன சொல்லக்கிடக்கிறது என்று வாழா இருந்து விடமுடியாது. தமிழ் சமுகம் இந்த மண்ணில் எதிர்காலத்தில் வாழப்போகின்றதா அல்லது எம்சமுகத்தின் அழிவைப் பார்த்து கண்டும் காணாதவர்களாக இருக்கப்போகிறோமா? என்பதே முக்கியமான விடயம்.

இன்று தமிழ்மக்களுக்கு எத்தகைய தீர்வு அவசியம் என்பதனை திட்டவட்டமாக நாம் கூறியாக வேண்டும் யுத்தத்தினால் பக்கவிளைவுகளாக உருவாகிய விடயங்களை மாத்திரம் நாம் பேசிக் கொண்டிருக்க முடியாது.

எமது பத்திரிகைகளிலும், ஏனைய மீடியாக்களிலும் அன்றாடப்பிரச்சினைகள் தொடர்பான ஒரு கழிவிரக்க போக்கே மேலோங்கிக்காணப்படுகின்றது. பேரினவாத சக்திகள் இராணுவம், பொலிஸ் தமிழ்மக்களின் அன்றாடவாழ்வில் ஏற்படுத்தி உள்ள நெருக்கடிகள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை.

யுத்தம் தமிழ்மக்களை, அவர்களின் வாழ்வை உருக்குலைத்துள்ளது அதேவேளை தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணகிடைத்த சந்தர்ப்பங்கள் தமிழர்களாலேயே தவற விடப்பட்டுள்ளன இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட காலம், பொதுஜன முன்னணி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய காலம் இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் முக்கி

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் இன்று நாம் சந்தித்தளவு அழிவுகளைச் சந்தித்திருக்கவில்லை. தமிழர்களுடைய சமூகபொருளாதார வாழ்வு மீள் புனரமைக்க கூடிய நிலையிலேயே இருந்தது. இந்தியா எமக்கு பின்னணியில் இருந்தது.

13வது திருத்தச்சட்டத்தின் கீழான அதிகாரப்பரவலாக்கல் முழுமைபெறாததாக இருந்தது. அதில் பிரேமதாசா அரசு இதய சுத்தியுடன் செயற்படவில்லை. அதிகாரப்பரவலாக்கலுக்குட்பட்ட சட்டம் ஒழுங்கு, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, நிதி ஒதுக்கீடு ஆகியவற்றில் சட்டப்படி உள்ள உரிமைகளில் கூட இழுத்தடிப்புக்களை செய்தது.

ஏன் புலிகளுடன் கூட்டுச்சேர்ந்து அமைக்கப்பட்ட மாகாண அரசின் செயற்பாடுகளை சீர்குலைப்பதில் .பிரேமதாசா அரசு சதிநாசவேலைகளில் ஈடுபட்டிருந்தது. மாகாண அரசு பிரசவமான வேகத்திலேயே அதன் ஆயுளும் முடிந்துவிட்டது.

மாகாண அரசு அமைந்திருந்த காலத்தில் எந்தெந்த விடயங்கள் சாதிக்கப்பட்டிருந்தனவோ அத்தனையும் பின்னர் தவிடு பொடியாக்கப்பட்டன. மாகாண தலைநகர் திருமலை பின்னர் திட்டமிட்ட குடியேற்றக்காரர்களின் ஆதிக்கத்திற்குள் சென்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பொத்துவில் வரை முல்லைத்தீவினூடாக போடப்படவிருந்த ரயில் பாதை, வீதி அமைப்புத்திட்டங்கள் திருமலையை ஒரு நவீன நகரமாக்கும் திட்டங்கள் யாவுமே கானல் நீராகின.

இந்தியாவுக்கு இலங்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள், சென்னைப்படுகொலை பயங்கரத்தின் தொடர்ச்சியான உறுதியற்ற ஆட்சி நிலமைகள் ஆகியனவும் பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் சீர்கெட்ட உறவை மீண்டும் சீரமைக்கும் இலங்கை அரச மட்டத்திலான முயற்சியும், எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தமிழர் பிரச்சினைத் தொடர்பில் தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்ட சலிப்பு, வெறுப்புணர்வுகளும் இந்தியாவை எமது பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கவைத்தது.

அதன்பின்னர் பிரச்சினைகளைத்தீர்க்கிறேன் பேர்வழி என்று மங்களமுனசிங்கதலைமையில் தெரிவுக்குழு அமைத்து அது பேசிப்பேசியே தேய்ந்துபோனது. அடிப்படையில் கபட நோக்கங்களுடன் செயற்பட்ட பிரேமதாசா அரசு இருந்த மாகாணசபையை விசேட சட்டம் ஒன்றின் மூலம் கலைத்ததோடு விடயங்களை முடித்

ஐ.தே.கட்சியின் காலத்தின் இனவன்முறைகள், பூதாகார உருவெடுத்த இனப்பிரச்சினை, தெற்கின் இளைஞர் எழுச்சியை அடுத்து தோற்றுவிக்கப்பட்ட கொடூர அடக்குமுறை, படுகொலைகள்,



காணாமல்போதல் போன்ற பிரச்சினைகள் பொதுஜன முன்னணியை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டுவருவதில் காரணிகளாக இருந்தன.

ஜனநாயகம், மனித உரிமை உறுதிப்படுத்தப்படும். இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வும், மனித முகம்கொண்ட சமூக பொருளாதார அமைப்பு இவையே பொதுஜன முன்னணியின் வாக்குறுதிகளில் அடங்கியிருந்தன.

அந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றே கூற வேண்டும். தமிழ்மக்களின் அடிப்படையான பிரச்சினைகளை பற்றிப் பேசுவதைவிடுத்து அன்றாடப் பிரச்சினைகளைப்பற்றி பேசிவிட்டு திருமலையில் கடற்படை மீது தாக்குதல் நடத்தி ஐந்து மாதங்களுக்குள் தாங்களாகவே பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டனர். தற்போது யுத்தத்தின் கோர சுவடுகள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன.

1990க்கு பின் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த யாழ்ப்பாணத்தை 1995ல் புலிகள் இழந்தார்கள். திரும்பவும் அதனை புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதென்பது இயலாத

1988-1990 வரை வடகிழக்கு அரசியல் நிர்வாகத்தின் பெரும் பகுதி இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் எமது கையில் இருந்தது. இப்போது எதுவும் இல்லை. இது

**எஸ்.திருநாவுக்கரசு**

வரையான இழப்புக்கள், உயிரழிவுகளுக்கு எதுவித அர்த்தமும் இங்கு இல்லாமல் போனது.

தமிழ்மக்களின் இவ்வளவு கால இழப்புக்களுக்கும் ஈடுசெய்யக் கூடிய தீர்வு இன்னும் கானல் நீராகவே இருக்கிறது.

கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவதில் புலிகள் புத்திசாலித்தனத்தோடு தூர நோக்கோடு நடந்துகொள்ளவில்லை.

இந்த இரண்டு சந்தர்ப்பத்திலும் அவர்கள் நடந்துகொண்ட முறை பேச்சுவார்த்தைகளில் அவர்களின் நம்பகத்தன்மை தொடர்பான கேள்வியை எழுப்பியுள்ளன.

ஏன் சர்வதேச ஆதரவு அரசுக்கு சாதகமாக மாறியதில் கூட புலிகளின் இந்த நிலைப்பாடு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

புலிகளின் ஜனநாயக விரோத நிலைப்பாடும், தொற்று வியாதியாக தமிழ் அரசியல் இயக்கங்களைப் பீடித்திருப்பதும், மக்களுடன் சுதந்திரமாக கலந்துரையாடுவதற்கான நிலைமைகள் கடினமாகியிருப்பதும், மக்கள் தமது அபிலாசைகளுக்காக போராடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டிருப்பதும் இங்கு ஆக்கபூர்வமான தீர்வொன்று உருவாகுவதை தடைசெய்துள்ளது.

இங்கு அரசியல் தீர்வுதான் என்ன என்பதும் தவிர்க்கவேண்டிய பொருளாகியுள்ளது. இதனைப் பற்றி நாம் பேசியாகவேண்டும். அரசியல் இயக்கங்களும், மக்கள் சார்நிறுவனங்களும் தமக்குள்ளும் மக்களுடனும் இவைபற்றி பேசியாகவேண்டும். தாம் சுமந்துகொண்டிருக்கும் ஒடுக்குமுறைச் சுமைகளால் எதையும் அடையாளம் கண்டு எழுச்சிகொள்வதற்கான நிலமைகள் இல்லை.

★ தாம் எதிர்நோக்கும் பொருளாதார தடைக்கெதிராக

★ காணாமல் போனவர்களுக்காக

★ யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்து நெருக்கடிகளை தீர் செய்யக்கோரி உண்ணாவிரதப்போராட்டங்கள் மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அதுவும் பெருமளவு மக்கள் பங்குபற்றுதலுடன் நடைபெறவில்லை.

தற்போது தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக 1995 ஆகஸ்ட்டில் இந்த அரசினால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் இதுவரை அமுலுக்கு வரவில்லை. ஆனால் தேர்தல் நெருக்கிவிட்டது.

தீர்வு யோசனைகளுக்கு ஐ.தே.க ஆதரவளிக்கவில்லை என்பதே அரசினால் முன்வைக்கப்பட்ட காரணமாகும். அது உண்மைதான்.

ஆனால் அரசு தனது கடமையை செய்யத்தவறி விட்டதென்றே கூறவேண்டியிருக்கின்றது. பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வருகிறதோ இல்லையோ அந்த யோசனைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்றிருக்கவேண்டும். இல்லையேல் தீர்வு யோசனைகள் தொடர்பில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியிருக்க வேண்டும் ஆனால் இந்த இரண்டு விடயங்களும் நடைபெறவில்லை இது சிறுபான்மை இன மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் விடயங்களாகும்.

அரசு முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் தொடர்பாக நியாயமான பலகுறைபாடுகள் தமிழர் தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த தீர்வும், அரசியல் தலைமைத்துவமும் இன்றைய அவசியமான விடயங்களாகும்.

புலிகள் மறுதலை இராணுவம் என்ற நிலையே வடகிழக்கில் ஆதிக்கம் வகிக்கும் நிலையாகும். அரசியல் கட்சிகள். ஏனைய சமூக நிறுவனங்களின் செயற்பாட்டிற்கான இடைவெளி குறைவாகவே காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரும்பான்மை இனமக்களோ, உலகில் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகள் வடகிழக்கு வாழ்மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

பாஸ், அகதிமுகாம் தடை, பிரதேசசத்திற்கு பிரதேசம் நடமாடுவதில் கட்டுப்பாடு நினைத்த மாத்திரத்திலான கைதுகள், காணாமல் போதல், இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள், யுத்தத்தில் அன்றாடம் கொல்லப்படுபவர்கள், திடீர் திடீர் இடம் பெயர்வு, பெயர்த்து வேறு இடம் கொண்டு செல்லப்படல் என்பனவும் கணிசமான ஒரு பகுதியினரின் வாழ்வும் மரணமுமாக இருக்கின்றது.

இந்த ஈவிரக்கமற்ற துப்பாக்கிகளின் அதிகாரத்தில் அவர்களில் பலருக்கு பல்லுக்காட்டவேண்டிய நிலையும் பலருக்கு ஜால்ராப் போடவேண்டிய நிலையும் இருக்கிறது. துப்பாக்கியை வைத்திருக்கிறார்கள் என்பதற்காக தற்குறிகளுக்கெல்லாம் சலாம் போடவேண்டிய நிலை.

இந்த நிலைமை இன்னும் 5வருடங்கள் தொடருமானால் சமூகம் எங்கு நிறுத்தப்படும் என்பதை நாம் கற்பனை செய்ய முடியாது. தமிழ்ச் சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்றவும் முன்னேற்றத்தை நோக்கிய பாதையில் செல்லவும் உறுதியான தலைமைத்துவமும், அபிலாசைகளை உறுதி செய்யும் தீர்வும் அவசியமாகும்.

50 ஆண்டுகளாகத்தானே சொல்லிவருகிறோம் காரியம்தான் நடக்கவில்லை புதிதாக என்ன சொல்லக்கிடக்கிறது என்று வாழா இருந்து விடமுடியாது. தமிழ் சமுகம் இந்த மண்ணில் எதிர்காலத்தில் வாழப்போகின்றதா அல்லது எம்சமுகத்தின் அழிவைப்பார்த்து கண்டும் காணாதவர்களாக இருக்கப்போகிறோமா? என்பதே முக்கியமான வியம். இன்று தமிழ்மக்களுக்கு எத்தகைய தீர்வு அவசியம் என்பதனை திட்டவட்டமாக நாம் கூறியாக வேண்டும் யுத்தத்தினால் பக்கவிளைவுகளாக உருவாகிய வியங்களை மாத்திரம் நாம் பேசிக்கொண்டிருக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# படுகொலைகளுக்கான முன்னறிவிப்பு



## வாழ்வு! பறிக்கப்பட்ட வாழ்வு!!

மாற்று அரசியல் கட்சிகள், இயக்கங்களுடனும், இராணுவத்துடனும் இணைந்து செயற்படும் அதாவது தேசத்துரோகக் குழுக்களின் அங்கத்தவர்களாக இருப்பவர்களை தம்முடன் இணைந்து போராடவருமாறும், பிரபாகரனின் தலைமையை ஏற்றுக்கொள்ளுமாறும், அதனால் அனைவருக்கும் மன்னிப்புக்கிடைக்குமென்றும் புலிகளின்குரல் வானொலியில் விசேட அறிக்கை ஒன்று திரும்பத்திரும்ப ஒலிபரப்பப்படுகிறது.

புலிகள் இதுவரை மாற்று இயக்கங்களின் மேல் தொடுத்து வந்த ஜனநாயகவிரோத படுகொலைத் தாக்குதல்களை உக்கிரமாக நடத்துவதற்காகவே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

1986இன் முற்பகுதியிலிருந்து இறுதிப் பகுதிவரை ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கங்கள் மீது ஒன்றன் பின் ஒன்றாக நடத்தப்பட்ட தாக்குதல் போன்று புதிய வடிவத்தில் தாக்குதல் நடத்தப்படவுள்ளது. நாங்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்து விட்டுத்தான் செய்தோம் என்று பின்னர் சப்பை கட்டுக்கட்டுவதற்காகவே இந்த அறிவிப்பு.

அத்துடன் மாற்று அரசியல் செய்பவர்களை பீதியில் உறைய வைப்பதும் அதன் மூலம் தனது ஏகப்பிரதிநிதித்துவக் கருத்தை நிலைநாட்டுவதும் அதன் மூலம் எமது மக்களின் மீது தனது கேள்விக்கிடமற்ற சர்வாதிகாரத்தை திணிப்பதுமே அவர்களின் நோக்கமாகும்.

இது இயற்கை விதிகளுக்கும், சமூக அரசியல் விதிகளுக்கும் முரணான ஒரு பாரதூரமான நடவடிக்கையாகும். எமது சமூகம் சந்தித்திருக்கும் இன்றைய மோசமான அழிவுகளுக்கு இந்த ஜனநாயக விரோதப் போக்கு குறிப்பிடத்தகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. பேரினவாதம் மாத்திரம் இதற்கு முழுப் பொறுப்பும் என்று கூறி நாம் தப்பித்துக் கொள்ளமுடியாது. அது வரலாற்று உண்மைகளை மறுக்கும் செயலாகும்.

புலிகள் தமிழ்மக்களின் விடுதலைக்குப் போராடுகிறார்கள் என்று கூறுபவர்கள் அவர்கள் தமிழ்மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு எதனை சாதித்துள்ளார்கள் என்று கூறமுடியுமா? அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சமூக பொருளாதார நிலை என்ன? என்பது யாரும் அறியாததல்ல.

21ம் நூற்றாண்டை வெற்றிகரமாக முகம்கொடுக்கவேண்டிய எமது சமூகம் சீரழிந்து, சின்னாப்பின்னமாகி அழிந்து போகும் நிலையிலுள்ளது. கம்பூச்சியா, ஆப்கானிஸ்தான் நிலைமைபோன்ற தொரு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனை மீள்புனரமைக்க முடியாததொரு நிலமை எமது சமூக, பொருளாதார வாழ்வு ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்வு, ஒழுங்கற்ற வாழ்க்கை, தொழில் இன்மை, போசாக்கின்மை, கல்வி அறிவில்லாத இளந்தலைமுறை என்பன விளைவுகளாக இருக்கின்றன. பீதியும், கவலையின் ரேகைகளுமே எமது மக்களின் முகங்களில் காணப்படுகின்றன. தன்னம்பிக்கை இழந்த சமூகமாக எமது சமூகம் நடைப்பிண நிலையை எய்தியுள்ளது.

சோமாலிய குழந்தை போன்ற தொரு குழந்தையின் படம் எமது பத்திரிகைகளில் பிரபலமானது இந்த குழந்தையின் தாய்தந்தையினர் சிங்கள இனவாதிகள் மாத்திரமல்ல தமிழ் பாசிச வாதிகளும் தான்.

சமூகத்தின் ஆரோக்கியமான அம்சங்கள் பலவற்றை புலிகள் தேடித்தேடி அழித்துள்ளார்கள். சமூகத்தின் அத்தனை அம்சங்களும் பிரபாகரனுக்கு விசுவாசமானதாகவும், கீழ்ப்படிவுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள் அவ்வாறு இல்லாதெல்லாம் அழிக்கப்படவேண்டியவை.

உதாரணமாக யாழ் குடாநாட்டு மக்களின் விமானப்பயணம் முதற்கொண்டு, உள்ளூராட்சி சபைகளினூடாக பெறக்கூடிய திருத்தமான உள்ளூர் வீதிகள், வாசிகசாலைகள் வரை அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாக இயங்க முடியாது.

மக்களின் விருப்ப தேர்வின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு அல்லது உள்ளூராட்சி சபைகளுக்கோ தெரிவு செய்யப்பட்ட ஒருவரை படுகொலை செய்வதென்பது வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எதிரான அச்சுறுத்தல் ஆகும்.

50வீதமான மக்கள் யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களித்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தவிர பெருவாரியான மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் வாழவிரும்பவில்லை என்பதே உண்மையாகும். என்ன பாடுபட்டாவது எவ்வளவு பணத்தை செலவழித்தாவது அப்பிரதேசங்களில் இருந்து வெளியெறிவிட விரும்புகிறார்கள்.

மக்களின் விடிவுக்காகத்தான் போராட்டம் என்றால் எவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறுகிறார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நிலவும் மக்களின் ஜீவாதார தேவைகளுக்கான பற்றாக்குறைகள் மாத்திரமல்ல. புலிகளின் சர்வாதிகார செயற்பாடுகளும் தான் காரணமாய் அமைகின்றன. பயிரிடுவோர், தோட்டக்காரர், உழவு இயந்திரம் வைத்திருப்போர், அரசாங்க தனியார் துறை ஊழியர்கள் எல்லோரிடமும் வரி அறவிடப்படுகின்றது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்படும் பொருட்களில் புலிகள் தமக்கும், போராளிகள் குடும்பம் என்றும், மாவீரர் குடும்பம் என்றும் சொல்லப்படுபவர்களுக்கே முன்னுரிமை. அதிலும் பெருவாரியான பொருட்கள் புலிகளால் நடத்தப்படும் கடைகள், அங்காடிகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவர்கள் கொழும்பு விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து வன்னி விலைக்கு விற்பனை செய்கிறார்கள்.

இந்த இலட்சணத்தில் மாற்று இயக்கங்களை சார்ந்தவர்களை தம்முடன் இணைத்து பொதுசேவை?? செய்ய வருமாறு அழைக்கிறார்கள் போதாக்குறைக்கு கொழும்பு தமிழ்த் தினசரி ஒன்று புலிகள் நேசக்கரம் நீட்டியுள்ளதாக தலைப்பிட்டு செய்திகள் வெளியிட்டுள்ளது. இது நேசக்கரமா? அல்லது பாசக்கயிறா என்பது தமிழ் மக்கள் அறியாததல்ல.

அவர்களால் கொல்லப்பட்ட மாற்றுக்கருத்து உடையோர், மாற்று இயக்கங்கள், அரசியல் கட்சிகளின் போராளிகள் சுமார் 15 ஆயிரத்தைத்தாண்டும். அவர்களிற்பலரின் புதைகுழிகள் எங்கு இருக்கின்றதெனத்தெரியாது. ஆனால் இதை தட்டிக்கேட்பதற்கு எமது தமிழ் கல்விமான்கள், அரசியல் தலைவர்களுக்கு நாதியில்லை.

தியாகிகள் என்றால் சாவைத் தழுவிக் கொள்ள வேண்டியவர்கள். துரோகிகள் என்றால் கொல்லப்படவேண்டியவர்கள் என்பதுதான் புலிகளின் கோட்பாடாக இருக்கின்றது. ஆனால் மானுட வாழ்க்கையின் நடைமுறை அவ்வாறானதாக இல்லை.

புலிகளை பொறுத்தவரை தம்மைத்தவிர சகல இயக்கத்தவர்களையும் துரோகிகளாகவே கருதுகிறார்கள். அவர்கள் உலகில் வாழக்கூடாது என்றே கருதுகிறார்கள். ஏன் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது இயக்கத்தின் உள்ளே புதியவர்கள் மேல் எழுவதற்கு அனுமதிப்பதில்லை.

தம்மைவிட ஆளுமையுடைய ஒருவர் உருவாகுவாரேயானால் அவர் நிச்சயம் மரணத்தை சந்திக்க வேண்டிவரும். ஏன் அவரின் இயக்கத்தில் உள்ள பல்லாயிரக்

**சத்தியன்**

கணக்கான இளைஞர்களும், பெண்களும் யுத்தயந்திரத்தின் பகுதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இரும்புத்துண்டங்களின் பகுதிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களது மனிதச் சுயாதீனம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலேயே தற்கொலைக் குண்டுதாரி உயிராயுதம் என அழைக்கப்படுகிறான். அவ்வாறு உடல் சிதறி மரணிப்பவர்களின் சிதைவுகளை காட்சிப் பொருளாக்கி ஒரு குரூரபடையொன்றை ஓயாது கட்டியெழுப்புகின்றனர். புலிகளில் அங்கத்துவம் வகிப்பவர்களின் வாழ்க்கைக் காலம் வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைக்காலம் போன்றது.

நீண்ட காலத்திற்கு அவர்கள் வாழ்வதை புலிகளின் தலைமை அனுமதிப்பதில்லை. உணர்வுபூர்வமாகவே இக்காரியங்கள் புலிகளின் தலைவர் பிரபாகரனால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த இலட்சணத்தில் மற்றைய இயக்க அங்கத்தவர்களை தம்முடன் இணையச்சொல்வது எவ்வளவு தூரம் நகைப்புக்கிடமானது. அவ்வாறு இணையாதவர்களை துரோகிகள் என்பது எவ்வளவு நச்சுத்தன்மை வாய்ந்தது. உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் உதாசீனம் செய்து தற்போதைய அழிவு நிலையில் நிறுத்தி உள்ள புலிகளை என்னவென்று அழைப்பது? ●

## அரசியலை விட்டு.......

முதலாம் பக்கம் தொடர்ச்சி

லங்காவினது பாதுகாப்பு வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கின்றனர்.

ஆனால் அதேவேளை, வழக்கமாக மொத்த வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களித்து அரசாங்கம் விழ்ச்சியடையாமல் பாதுகாத்துக்கொள்கிறார்கள்.

கூட்டணியின் ஒரு பகுதியினரை புலிச்சார்பு போல் ஆக்குவதன் மூலம், அக்கட்சி புலிகளை ஏமாற்ற முனைவாதாக புலிகள் நினைக்கிறார்கள். புலிகளும் கூட்டணியினது அரசியல் தளம் குறித்து கவலையடைந்துள்ளனர். இந்த தடை விதிப்பானது அவர்களை

> கூட்டணியின் ஒரு பகுதியினரை புலிச்சார்புபோல் ஆக்குவதன் மூலம், அக்கட்சி புலிகளை ஏமாற்ற முனைவாதாக புலிகள் நினைக்கிறார்கள். புலிகளும் கூட்டணியினது அரசியல் தளம் குறித்து கவலையடைந்துள்ளனர். இந்த தடை விதிப்பானது அவர்களை அழித்தொழிப்பதற்கான ஒரு நடவடிக்கையே ஆகும்.

அழித்தொழிப்பதற்கான ஒரு நடவடிக்கையே ஆகும்.

லண்டனில் உள்ள புலிகளின் பிரதிநிதி, மிதவாதக்கட்சி ஒரு தளத்தை வைத்திருந்ததை பல தடவைகளில் ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், கூட்டணியை புலிகள் இராணுவ அணிக்கு மேலாக தளத்திலுள்ள அரசியல் அமைப்பாக தொழிற்படுவதற்கு அனுமதிப்பது, கேள்வி விசாரணை இன்றி

டணிப் பிரதிநிதி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

மிதவாதிகளது ஆற்றல் சக்தி குறித்து மிகவும் அச்சம் கொள்வதாகவும் அதனால் புலிகள், தங்களை நேச சக்திகளாகவும் விரும்பவில்லையென கூட்டணியினர் கூறுகின்றனர். அடுத்த நகர்வாக எது இருக்கப்போகின்றது என எந்தவொரு சமிக்ஞையையும் புலிகள் இதுவரை கொடுக்கவில்லை.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணியின் மூன்று பா.உறுப்பினர்களையும், முஸ்லீம் காங்கிரசின் ஒரு பா.உறுப்பினரையும், யூ.என்.பியின் ஒரு பா.உறுப்பினரையும் அரசியல் நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்வதுடன் மக்களுடன் தொடர்புகளை துண்டிக்கும்-படியும் கூறியுள்ளனர்.

இதற்கு இவர்கள் கீழ்படியாவிடில் இவர்கள் கொல்லப்பட்டு விடுவார்களாம். இதனையடுத்து, ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது அனைத்து நிகழ்ச்சிகளையும் இரத்து செய்து விட்டு

உறுப்பினர்கள் தொழிற்படுவதை தடுப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை செல்லாக்காசாக்க முயல்கிறார்கள் என தமிழ் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் இருப்பானது, உலக நாடுகளின் பார்வையில் ஸ்ரீலங்காவின் அரசியல் அமைப்பிற்கு சில நல்ல அபிப்பிராயத்தை கொடுத்துக்கொண்டு வருகின்றது.

இத் தீவுக்கு விஜயம் செய்கின்ற உலகத்தவர்களை இப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பதுடன், அவர்களது தமிழர் பிரச்சினை பற்றிய பார்வையில் இம் மிதவாதிகளினால் மாறுதல் உண்டு பண்ணப்படுகின்றது.

1999 இறுதியில் அல்லது 2000 இன் ஆரம்பத்தில் வரவிருக்கின்ற பாராளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தல்கள், இப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு மற்றுமொரு காரணமாக உள்ளது. இக்காலப் பகுதியில் கூட்டணியினர் தொழில்படுவதை புலிகள் விரும்பவில்லை.

அதிகளவிலான மக்கள் ஆதரவை கொண்டிருக்காமையினாலும், மிக எளிதாக அழித்தொழிக்கப்படக்கூடியவையாக இருப்பதாலும் முன்னாள் ஆயுதக் குழுக்களும் தற்போதைய பாராளுமன்ற தமிழ் குழுக்களான புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி ஆகியன பற்றி புலிகள் பொருட்படுத்தவேயில்லை.

padippakam

www.padippakam.com



## புலிகள் எதிர் இராணுவம்

‘காற்றுப்புக முடியாத இடத்திற்குள்ளேயே புகுந்து கொலை செய்வோம்’ என்று புலிகள் தமிழ்க் கட்சிகளை மிரட்டியிருக்கிறார்கள். தமது இருப்பை தக்கவைப் பற்கும், இராணுவ ரீதியாக தமது தோல்விகளை மறைப்பதற்கும் புலிகள் கையாளும் வழிமுறைகளில் இதுவும் ஒன்று. ஆனால்

ஓயாது என்று புலிகள் மார்பு தட்டி அவர்களின் உறுதிப்பாட்டை வெளிக்காட்டியிருந்தாலும் இந்த வார்த்தைகள், இழப்பினாலும் தோல்விகளினாலும் விரக்தியுற்று

னிலிருந்து மேற்கே பூநகரி நோக்கி நகர்த்தப்பட்ட படையணி புலிகளால் தொடுக்கப்பட்ட எதிர்தாக்குதலை முறியடித்து முன்னேறியிருப்பதாக இராணுவப் பேச்சாளர்

ண்டு வான் ஊர்திகள் புலிகளிடம் இருப்பதாக நம்பப்படும் இந்த நேரத்தில் அதைபயன்படுத்த முடியாமல் இருப்பதும் ஆச்சரியம் தான்.

அதே நேரத்தில், முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் புலிகளின் ஆளுமை இன்று கடற்படையினருக்கு ஒரு சவாலாகவே விளங்குகின்றது. கரும்புலிகளின் தற்கொலைத்தாக்குதல்கள் அதற்கு பிரசித்தம். ‘இடியன்’ என்று அழை

எழுதியிருக்கிறார்கள். பிரபாகரனும் இன்று வன்னியிலிருந்துதான் செயல்படுகிறார். தனது முக்கிய தளபதிகளுடன் யுத்தம் பற்றிய ஆலோசனைகளையும் நடாத்தி வருகிறார். தனது சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக வெளியேறும் மக்களைப் பற்றி கவலை கொள்ளாமல் இந்த அர்த்தமற்ற யுத்தத்தை தொடர்வதிலேயே

# இருப்புக்களை இழந்து நிற்கும் புலிகள் வன்னியிலாவது நிற்பார்களா?

காற்றுப் புகமுடியாத புலிகளின் கோட்டைகளுக்குள் இராணுவம் புகுந்திருப்பதை அவர்கள் சற்று திரும்பிப்பார்த்தால் நல்லது.

★ ‘வெல்லமுடியாது என்று பலராலும் கருதப்பட்ட யாழ் குடாநாட்டிற்குள் 95ம் ஆண்டு புகுந்த இராணுவம், கடந்த நான்கு வருடங்களாக அங்கு நிலை கொண்டிருக்கிறது.

★ வவுனியா-மன்னார் வீதிக்குள் புகுந்த இராணுவம் அதைக் கைப்பற்றி தொடர்ந்து தக்க வைத்திருக்கிறது.

★ வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையும் இராணுவம் புகுந்து வன்னிப் பெருநிலக்காட்டில் கால்பதித்து நிற்கிறது.

★ இப்போ மன்னார்-சங்குப்பிட்டி பாதையை திறப்பதற்காக புகுந்த இராணுவம் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இதுதான் இன்றய யாதார்த்த நிலை இந்த இராணுவ பின்னடைவுகளை கருத்தில் கொள்ளாது - தமிழ்க்கட்சி உறுப்பினர்களை புலிகள் மிரட்டுவது கொலை செய்வது காலத்திற்கு ஒவ்வாத பயங்கரவாதமாகும்.

புலிகளின் வீரத்திற்கு சப்பை கட்டுபவர்களும் இதை புரிந்து தெளிவுபட வேண்டும். புலிகளை உசுப்பிவிட்டு அப்பாவிகள் மீது கொலை வெறியை தூண்டுபவர்கள் துப்புக் கொடுப்பவர்கள் ஒரு வகையில் பார்த்தால் துரோகிகள் தான். புலிகளை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் சந்தர்ப்ப வாதிகளும் அவர்கள்தான். புலிகளுக்கும் ஒரு வேண்டுகோள், அப்பாவிகளை புகுந்து தாக்காமல்

கொட்டப்பட்டவை என்றே சொல்ல வேண்டும்.

வடகிழக்கில் பரந்து-விரிந்திருந்த புலிகளின் இராணுவபலம்-இன்று சுருங்கி-வன்னிப் பெருநிலத்தின் கிழக்குப் பகுதியில் முடக்கப்பட்டிருப்பது இராணுவ ஆய்வுக்கு உட்பட்ட செய்தியாகும்.

கண்டி-யாழ் வீதியை திறக்கும் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டாலும், புலிகளின் பலத்தை ஓரிடத்தில் கொண்டு வந்து முடக்கச் செய்ததில் இராணுவம் வெற்றியே கண்டிருக்கிறது. ஒருவருடத்துக்கு மேலாக இந்த நடவடிக்கை தொடர்ந்ததால் வட-கிழக்கின் பல பாகங்களிலிருந்து விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் அழைக்கப்பட்ட தளபதிகளும் புலிப்படையினரும் இந்த சண்டையில் ஈடுபடுத்தப்பட்டு, இன்று வரை அதை பாதுகாப்பதற்காக நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். இன்று புலிகளின் பலமும் இதுதான். பலவீனமும் இதுதான். இராணுவம் மாங்குளத்தை தாண்டி வரவும் முடியவில்லை. புலிகளும் பெரும் எடுப்பில் தாக்குதல் நடத்த வேறு இடங்களுக்கு செல்லவும் முடியவில்லை.

புலிகளின் இந்த பலவீனமான நிலைமை ரணகோஷ 1-2-3 இராணுவ நடவடிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அதன் தொடர்ச்சியாக ரணகோஷ-4 இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. தள்ளாடியில் இருந்து சங்குப்பிட்டி-பூநகரி பாதை வழியாக ஒரு படை அணியும், பெரிய மடுவிலிருந்து மேற்கு திசைநோக்கி கனரக வாகன படை அணி

கூறியிருந்தாலும் சிலநாட்களின் பின் இந்த படைநகர்வு நிறுத்தப்பட்டு படைகள் முகாமுக்கு பின் வாங்கப்பட்டது.

பிரதான இடங்களை புலிகளிடமிருந்து கைப்பற்றுவதன் மூலம் அவர்களை மேலும் தனிமைப் படுத்தலாம் என்று இராணுவத்தினர் கருதுவதாக தெரிகின்றது. ஆகவே இந்த நடவடிக்கை சில நாட்கள் தொடரும் என்றே நம்பப் படுகின்றது.

வன்னியின் கிழக்குப் பகுதியில் முடக்கப்பட்டிருக்கும் புலிகள் வேறு இடங்களுக்கு தமது படை அணிகளை நகர்த்த-முடியாமல் கடும் ஆள்பற்றாக்குறையால் திண்டாடுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. இந்த மோசமான நிலையிலிருந்து மீள்வதற்கு கட்டாய இராணுவ பயிற்சிக்கு ஆள்பிடிக்கும் வேலையில் புலிகள் ஈடுபட்டிருப்பதாக வன்னியிலிருந்து அகதிகளாக வரும் மக்கள் கூறியிருக்கிறார்கள். வயது வித்தியாசமின்றி-கட்டாயத்தின் பேரில் சேர்க்கப்படும் இவர்கள் தரம்பிரிக்கப்பட்டு, பயிற்சி அளித்து, போர் முனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

தமிழ் ஈழத்திற்கான கடைசி யுத்தம் எனும் போதனையுடன் ‘செய் அல்லது செத்துமடி’ என்னும் கோஷத்துடன் வட-கிழக்கின் பிரதான இடங்களுக்கு பலிக்கடாக்களாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

குறிப்பாக யாழ்-குடாநாட்டிற்கு அனுப்பப்படும் இவர்கள் பல முனைகளில் தமது தாக்குதல்களை தொடுப்பார்கள் என நம்பப் படுகின்றது.



க்கப்படும் தற்கொலைத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் சிறிய படகுகள் முல்லைத்தீவு கரையிலிருந்தே தாக்குதலுக்கு புறப்படுவது வழக்கம்.

கூட்டமாக புலிகளின் படகுகள் கடலில் சஞ்சரிப்பதை தூரத்திலிருந்து அவதானிக்கும் கடற்படையினர் வம்பு வேண்டாம் என்று விலகியே செல்ல வேண்டியிலிருக்கிறது. கடந்த காலங்களில் ‘இடியனால்’ பல கடற்படைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருப்பதே அதற்கு காரணம்.

நீண்ட குறுகிய கால ஒப்பீட்டளவில் இராணுவம் பல வெற்றிகளை பெற்றிருந்தாலும் வட-கிழக்கின் எழுமாவட்டங்களிலும் விடுவிக்கப்படாத பிரதேசங்கள் என்று புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இன்று அங்கிருந்துகொண்டுதான் தாக்குதல்களை தொடுக்கிறார்கள்.

இன்று வன்னியில் பயிற்சி பெறும் புலிகள் பெரும் எடுப்பில் இந்த விடுவிக்கப்படாத பிரதேசங்களில் குவிக்கப்படுவார்களா - அல்லது வேறு பெரிய தாக்குதல் ஒன்றுக்கு நகர்த்தப்படுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

புலிகளின் யுத்த வியூகம் எதிர் காலத்தில் இப்படித்தான் இருக்கும் என்று கணிப்பிடமுடியாது. இதைக்கருத்தில் கொண்டே, ஆனையிறவு முகாமின் 52வது படை அணிக்கு தலைமை தாங்கும் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க, புலிகளின் பெரிய ஒரு தாக்குதலை தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் அதை எதிர்கொள்ளும் தயார் நிலையில் இருப்பதாகாவும் கூறியிருக்கிறார். இது புலிகளுக்கு எச்சரிக்கையா அல்லது வரவேண்டாம் என்ற சமிக்ஞையா?

பண்டார வன்னியனின் கடைசிக் காலமும் கடைசி யுத்தமும் வன்னியில்தான் முடிவடைந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள்

அவர் கவனமாக இருக்கிறார். சமாதானத்தை வேண்டி நிற்கும் மக்கள் மீதும் யுத்தம் திணிக்கப் படுகின்றது இதன் முதற்கட்டமாகவே வன்னியிலிருந்து பாலசிங்கம் லண்டனுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார். அவரின் உடல் நலக்கோளாறு காரணமாகவே அவர் லண்டனுக்கு அனுப்பப் பட்டிருப்பதாக செய்திகள் கூறினாலும்-தினம் சண்டையில் புலிகள் பலர் செத்துக்கொண்டிருக்க பாலசிங்கத்தின் உயிரை காப்பாற்ற பிரபாகரனுக்கு என்ன தேவை ஏற்பட்டிருக்கிறது. பாலசிங்கத்தின் உயிரை காப்பாற்ற மட்டும் என்றால் அதை நம்பமுடியாது. உயிரும் காப்பாற்றப்பட வேண்டும். அதேநேரத்தில் பிரபாகரன் எதிர்பார்க்கின்ற தன்னுடைய வேலைகளும் விரைவாக நடந்து முடியவேண்டும்.

அதற்கு பாலசிங்கம் வேண்டும். சர்வதேச உளவுப் படைகளுடன் இருக்கும் அவருடைய பழைய தொடர்புகளை மீண்டும் புதுப்பிப்பதற்கு அவரது லண்டன் பயணம் வழிவகுக்கலாம்.

புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கான யுத்தம் என்று அரச இராணுவமும்-தமிழீழத்திற்கான யுத்தமென்று விடுதலைப்புலிகளும் சொல்லிக்கொள்வது நம்பும்படியாக தெரியவில்லை. இருபகுதியினரும் தங்களின் நலன்களிலிருந்துதான் சிந்திக்கிறார்களே தவிர மக்களின் நலன்களைப் பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை.

வெற்றி பெறமுடியாத ஒரு இலக்கை நோக்கியே சென்றுகொண்டிருக்கும் இந்த யுத்தம் ஒரு சந்ததியை அழித்து முடித்து -இன்று சிறுவர்களாக இருக்கும் இன்னொரு சந்ததியை அழித்தொழிக்கும் வழியை தேடி நிற்கின்றது. இதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொண்டால் சரி.

என்.ஆர். சோமு



இராணுவத்திடம் இழந்த பிரதேசங்களை புகுந்து மீட்பதுதான் நீங்கள் இன்று செய்ய வேண்டிய இராணுவ நடவடிக்கையாகும்.

ஈழப்போர் மூன்று புலிகளால் முரசொலிக்கப்பட்டு நாலு ஆண்டுகளை தொட்டு நிற்கும் இந்த நேரத்தில் அது ஒரு முடிவில்லாத யுத்தமாக தொடருமா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

யும் நகர்த்தப்பட்டு முக்கிய சந்தியான பள்ளமேட்டை இராணுவம் கைப்பற்றியிருக்கின்றது. அத்துடன் மன்னார்-சங்குப்பிட்டி நெடுஞ்சாலையில் பதினொரு கிலோ மீற்றர் தூரத்தையும் கைப்பற்றியிருக்கின்றன. இந்த நடவடிக்கையின் போது புலிகளின் எதிர்தாக்குதல் கடுமையாக இருந்தபோதும் புலிகள் தரப்பில் 70பேரும், இராணுவ தரப்பில் 22 பேரும் பலியாகியிருக்கிறார்கள்.

வன்னியின் கிழக்கு பகுதியில் இருந்து போர் நடவடிக்கைகளுக்கு திட்ட மிடும் விடுதைலப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது பாதுகாப்பை பலப்படுத்தியிருப்பதாக அறியப்படுகின்றது. எந்த நேரத்திலும் விமானப்படையினரின் வான்தாக்குதலை எதிர்பார்த்திருக்கும் பிரபாகரன் அதிலிருந்து தப்புதற்கான வழிமுறைகளை தனது நேரடிக்கண்காணிப்

www.padippakam.com



# பனிச் சிகரத்தில் தீப்பிளம்புகள்
# இந்தியா–பாகிஸ்தான் எல்லை மீறிய போர்?

இந்தியா–பாகிஸ்தான் யுத்தத்திற்கு இரண்டு முறை வித்திட்ட காஷ்மீர் பள்ளத்தாக்கு இன்று மூன்றாவது யுத்தத்திற்கான ஆரம்ப அறிகுறிகளை வித்திட்டு காட்டி நிற்கிறது. இந்தியாவின் பிரிக்கமுடியாத பகுதியாக இருக்கும் முக்கால்பங்கு ஜம்முகாஷ்மீரும்–பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் இருக்கும் கால்பங்கு அசாத் காஷ்மீரும் ஒன்றாக வேண்டும் என்று இப்போது ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வதுதான் பிரச்சினை.

அணு ஆயுத சோதனைகளில் வெற்றி கண்ட இரு நாடுகளும் இதில் பலப் பரீட்சை பார்க்க இறங்கியிருப்பது–இந்திய துணைக் கண்டத்திற்கே ஏற்பட்டிருக்கும் ஆபத்தாகும். சகிப்புத்தன்மை கொண்ட இந்தியாவிடம் அணு ஆயுதம் இருப்பதைவிட–மூர்க்கத்தனமான பாகிஸ்தான் இராணுவத்திடம் இருப்பதுதான் ஆபத்தானது.

ஏனென்றால் இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா அணுவாயுத நாடென்பது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்.

சிம்லா ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட எல்லைக்கோட்டைத் தாண்டி பாகிஸ்தான் படையினரும்–காஷ்மீர் தீவிரவாதிகளும் இந்தியாவின் பிரிக்கப்பட முடியாத காஷ்மீருக்குள் அத்துமீறிப் புகுந்ததின் விளைவாக இரு நாடுகளுக்குமிடையில் ஒரு முழு அளவிலான யுத்தம் மூள்வதற்கு முனைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது.

என்று அத்தியாவசிய பொருட்கள் பாகிஸ்தான் இராணுவத்தால்–எல்லையில் வழி ஏற்படுத்தி தாராளமாக வளங்கப்பட்டிருந்தது.

தூங்கிக் கொண்டிருந்த உளவுப்படையினர் விழித்த போது மலைப்பதுங்கு குழிகளின் மேல் ஆக்கிரமிப்பாளர்கள் வீற்றிருந்தார்கள்.

பாகிஸ்தானிலும்–ஆப்கானிஸ்தானிலும் நன்கு பயிற்சி பெற்ற இவர்கள் இரண்டு மாதங்கடந்தும் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்கிறார்கள் என்றால் அவர்களை சாதாரணமாக எடைபோடவும் முடியாது–விரட்டவும் முடியாது.

விமானத் தாக்குதல்–பீரங்கித் தாக்குதல் மூலம் இந்திய இராணுவம் பதிலடி கொடுத்தாலும், ஊடுருவல்காரர்களை விரட்டுவது அவ்வளவு சுலபமல்ல என்பதை இந்திய இராணுவ அதிகாரிகளே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தரைப்படை அணிகள் மலையை நோக்கி நகர்த்தப்பட்டு முஸ்லீம் தீவிரவாதிகளுடன் நேரடிச் சமர்புரிய வேண்டிய மோசமான கட்டத்தை எட்டியிருந்தது. இதுவரை இரண்டு மிக் விமானம், ஒரு கெலிகொப்டரை பறிகொடுத்து, 200 இந்தியா ஜவான்களுக்கு மேல் இந்த யுத்தத்திற்காக இந்தியா இழந்திருக்கிறது. இருப்பினும், இழக்கப்பட்ட பல இடங்கள் மீட்கப்பட்டிருப்பது சற்று ஆறுதலான சங்கதி. ஆனால் போர் தொடர்கின்றது.


சர்வதேச ரீதியில் இந்த யுத்தத்திற்கான நியாயம் இந்தியா பக்கம் சார்ந்திருக்கும் இந்த நேரத்தில் இதைவிட்டால் கிடைக்கப்போவதில்லை. எல்லாம் கூடிவரும் இந்த நேரத்தில் இந்திய இராணுவம் தனது தாக்குதலை விரிவுபடுத்தும் என்றே நம்பப்படுகின்றது.

ஆனால் இந்திய அரசு ஒரு விடயத்தை கவனத்தில் எடுக்க வேண்டும். ஒப்பீட்டளவில் இந்திய இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்தைவிட பலமடங்கு பெரிதாக இருந்தாலும் நவீன தொழில்நுட்பத்தில் இந்தியாவுக்கு ஈடுகொடுக்கும் அளவில் பாகிஸ்தானும் முன்னேறியிருக்கிறது.

அமெரிக்கா–சீனாவின் புதிய தொழில்நுட்பம் பாகிஸ்தான் இராணுவத்திற்கு பாச்சப்பட்டிருக்கிறது. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை வைத்திருக்கும் இந்தியா அதை நவீனப்படுத்துவதில் பின்தங்கியே இருக்கிறது.

அதற்கு உதாரணம் மிக்–21 ரக விமானம் இரண்டு பாகிஸ்தானால் சுட்டுவீழ்த்தப்பட்டிருப்பது. 20வருடங்களுக்கு மேல் பழையதும்–ரஷ்ய தயாரிப்புமான இந்த போர் விமானங்கள் இன்றைய விமான யுத்தத்திற்கு ஈடுகொடுக்குமா என்பதும் சந்தேகம்தான்.

நீண்ட குறுகிய தூர ஏவுகணை தயாரிப்பில் இந்தியா வெற்றிகண்டிருந்தாலும்–விமானப்படையை பொறுத்த அளவில் பின்தங்கியே இருக்கிறது. உலகில் விமானப்படை விமானங்கள் விழுந்து நொறுங்குவதில் இந்தியா முதல் இடத்தில் இருந்தாலும் ஆச்சரியமில்லை. தரம் குறைந்த விமானங்களை போர் முனைக்கு அனுப்பி தரம் நிறைந்த விமானிகளை கொல்லக் கொடுப்பது இந்தியாவின் எதிர்கால பாதுகாப்புக்கு ஆபத்தாகவே முடியும்.



இந்தியாவுடன் ஒரு முழு அளவிலான யுத்தத்திற்கே அது வரிந்துகட்டி நிற்பதாக தெரிகிறது. கொடூர சித்திரவதை செய்து கொல்லப்பட்ட இந்திய ஜவான்கள் ஆறு பேரை பாகிஸ்தான் இராணுவம்

**அலெக்சாண்டர்**

கையளித்த விதம் அதன் விபரீத போக்கையே காட்டியிருக்கிறது.

இந்த கடும் போக்குக்கு பின்னால் சீனாவின் கரங்கள் பாகிஸ்தான் வரை நீண்டிருக்கிறது என்றே சொல்லலாம். சீனா தனது நலன் காப்பதில் இந்தியாவுக்கு எதிராக சித்துவிளையாட்டுகளை ஆரம்பித்திருக்கின்றது.

முதலாவது, காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீட்டை எதிர்க்கும் சீனா–பாகிஸ்தான் இராணுவத்திற்கு தனது இராணுவ தொழில் நுட்பங்களை அளித்து அமெரிக்கா–பாகிஸ்தான் உறவில் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக பாகிஸ்தானின் அணுசோதனைக்கு சீனாவின் தொழில் நுட்பமும்–பங்களிப்பும் இருந்ததை குறிப்பிட்டு சொல்லலாம்.

இரண்டாவது–அமெரிக்கா, காஷ்மீர் பிரச்சினையில் தலையிட்டு அங்கே வந்து குந்திவிட்டால் தான் ஆக்கிரமித்துள்ள திபெத்தின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்ற சீனாவின் கவலையும் இதில் அடங்கியுள்ளது.

ஆகவே, பாகிஸ்தான் இராணுவத்திற்கு இராணுவ உதவிகள் செய்வதன் மூலம் அமெரிக்காவை தனது பிராந்தியத்திலிருந்து தூர வைப்பதும்– தனது பழைய பகை நாடான இந்தியாவுக்கு அச்சுறுத்தலையும் போர் ஆபத்தையும் பாகிஸ்தான் மூலம் ஏற்படுத்துவதே சீனாவின் இன்றய தேவையாகும்.

இந்தியா முழு அளவிலான போர் தொடுத்தால் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவிகளை சீனா வழங்கத் தயங்காது என்பது அதன் நடவடிக்கைகளில் இருந்து அறியமுடிகின்றது. அந்த உற்சாகத்தில் பாகிஸ்தான் இராணுவம் இந்தியாவின் எல்லைக்கோட்டை இன்று தாண்டியிருக்கிறது.

இந்த இக்கட்டானா நிலையிலிருந்து–இந்திய இராணுவம் எப்படியும் வெற்றிபெற்று மீண்டு வரும் என்பது இந்திய–சர்வதேச இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ஆனால் எதிர்காலத்தில் பாகிஸ்தானால் வரப்போகும் அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கு இந்தியா தனது முப்படைகளையும் இன்று இருப்பதை விட பல மடங்கு நவீனப்படுத்தியே ஆகவேண்டும். மேற்குலக வல்லரசு நாடுகளைப் போல் இந்தியாவின் இராணுவ வளர்ச்சி முன்னேற்றமடைய வேண்டும். இப்படி ஒரு நிலமை உருவானால்தான் இராணுவ வீரர்களின் உயிரிழப்பை குறைக்கமுடியும்.

இராணுவ வீரர்களின் சாவுக்கு வீரமரணம் என்று விழா எடுத்து–நாலு வேட்டுக்களை தீர்த்து திருப்திப்படாமல் தனது இராணுவத்தை நவீனப்படுத்தி திருப்திப்படுவது தான் இந்திய அரசின் இன்றுள்ள கடமையாகும். ●



கடந்த எட்டு வாரங்களாக காஷ்மீர் மலை உச்சிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மோதல்கள் அதை வெளிக்காட்டி நிற்கின்றன. இந்திய அரசின் உளவுப்படையினர் கண்மூடியிருந்த வேளை ஆயிரக்கணக்கில் ஊடுருவிய முஸ்லீம் தீவிரவாதிகள் எல்லைக் கோட்டை கடந்து கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திராஸ்–கார்கில்–டைகர்குன்று–டோபிலாலில், சுரு–ஜீபர் டாலிக் மலைபகுதியில் குடிகொண்டதுதான் விபரீதம்.

இந்த ஊடுருவல் பல நாட்கள் நிதானமாக தொடர்ந்தது தான் கசப்பான உண்மை. போரிடுவதற்கான ஆயுததளபாடங்கள்–தேவையான உணவுகள்–குளி

பாகிஸ்தானுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்ற எண்ணம் இந்திய இராணுவத்திடம் மேலோங்கியிருப்பதை காணமுடிகிறது.

குறிப்பாக அமெரிக்காவின் நிலைப்பாடு இந்தியாவின் சார்பாக இருப்பதால் அதை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இந்திய அரசும் தயங்காது. தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் காபந்து அரசுக்கும் இந்த யுத்தம் தேவையாகவே இருக்கும், என்பது அரசியல் அவதானிகள் கருத்து. எதிர்க்கட்சிகளும் இதற்கு எதிராக வாயைத் திறக்கப்போவதில்லை.

ஆகவே பாகிஸ்தானுக்கு இராணுவ ரீதியில் சரியான பதிலடி கொடுப்பது இந்தியாவின் எதிர்கால பாதுகாப்புக்கு ஆபத்தாகவே முடியும்.

பாகிஸ்தான் பிரதமர் நவாப் செரிப் இந்த மோதல்களை நிறுத்துவதற்காக முனைப்பு காட்டினாலும் அவரின் பேச்சைக் கேட்பதற்கு அவரது இராணுவ அதிகாரிகள் தயாரில்லை என்பதையே நடந்து கொண்டிருக்கிற சம்பவங்கள் வெளிக்காட்டியிருக்கிறது.

இந்த ஆக்கிரப்பு நடவடிக்கை பிரதமர் நவாஸ்செரிப்புடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்ற கருத்தும் பரவலாக நிலவுகின்றது. ஏனென்றால் பாகிஸ்தான் ஆட்சியாளர்களிடம் இருக்கும் பதட்டமும் தடுமாற்றமும் பாகிஸ்தான் இராணுவத்திடம் இருப்பதாக தெரி

## மேவினுக்கு அஞ்சலி



இலங்கையின் பிரபல பத்திரிகையாளர் மேவின்டீ சில்வா அவர்களின் மறைவுக்கு புதியகண்ணோட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

35வருடங்களுக்கு மேலாக உள் நாட்டு வெளிநாட்டு அரசியல், சமூக நிலவரங்கள் தொடர்பாக அவர் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை, துணுக்குகளை அவர் எழுதியுள்ளார். டெயிலிநியூஸ் பத்திரிகையில் தனது பத்திரிகை உலகப் பயணத்தை ஆரம்பித்த மேவின்டீ சில்வா இலங்கையின் பல்வேறு ஆங்கிலப் பத்திரிகைகளிலும், இந்தியா, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். அவருடைய எழுத்தில் ஒரு சமூக ஜனநாயக வாதம் இருந்தது.

அவரால் தொடங்கப்பட்ட லங்கா கார்டியனில் உலகினதும் தென்னாசி

வேறு சமூக அரசியல் பொருளாதார ஆய்வாளர்களின் கட்டுரைகளை இடம் பெறச்செய்தார்.

அவர் இந்தியாவின் பத்திரிகை உலகின் ஜாம்பவான் காலஞ்சென்ற நிக்கில் சக்கரவர்த்தியுடன் ஒப்பிடப்படுபவர்.

இன்று இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகை துறைசார்ந்தவர்களில் பலருக்கு அவர் வழிகாட்டியாக

www.padippakam.com



# நம்பிக்கை இழக்கும் புலிகளும் நழுவிப் போகும் ஆதரவாளர்களும்

“விதியே விதியே தமிழ்ச் சாதியை என் செய நினைத்தாயென” கேள்வி எழுப்பி கவிதை பாடினான் பாரதி ஆனால் இன்று தமிழர்கள் உள்ள நிலையை பார்க்கும் போது பாரதியின் கேள்வியை திருத்தி “விதியே விதியே இலங்கைத் தமிழர் சாதியை என் செய நினைக்கிறாய்” எனக்கேட்க வேண்டிய நிலையே உள்ளது.

### கடவுள் காப்பாற்றுவாரா?

1970ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த போது யாழ்ப்பாண கச்சேரியின் முன்றலில் தமிழரசுக் கட்சியினதும் பரந்து பட்ட தமிழ் மக்களினதும் மரியாதைக்குரிய தலைவர் செல்வா அவர்கள் “தமிழர்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்றார்” அவர் அவ்வாறுசொல்லி 29 ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இலங்கைத் தமிழரின் இன்றைய நிலையை முழுமையாக நினைத்து, நிதானித்து பார்ப்போமாயின், எல்லா சமயங்களிலும் கூறப்பட்டுள்ள அத்தனை கடவுளர்களும் ஒன்றாக கூடி முயற்சித்தாலும் கூட இலங்கைத்தமிழர்களை காப்பாற்ற முடியுமா? என்பது பதில் கூற முடியாத வினாவாக மட்டுமே உள்ளது.

அந்த கடவுளர்கள் தற்செயலாக வடக்கு கிழக்கிற்கு வந்து தமிழர்களின் உண்மை நிலையை உணர்ந்து தமிழர்களுக்காக குரல் கொடுக்க முயன்றார்களானால் அவர்களும் புலிகளால் துரோகிகள் எனப்பட்டங்கட்டப்பட்டு சுட்டுக்கொல்லப்படுவார்கள்.

புலிகளின் புத்தி ஜீவிகளும், “ஸ்ரீலங்கா அரசை எதிர்த்து போராடவக்கற்றவர்கள்”, “சிங்கள அரசின் கைக்கூலிகள்” என்றே அக்கடவுளர்களைபற்றி வாராவாரம் கட்டுரை வெளியிடுவார்கள். பிரபாகரனின் அடிமையாக இல்லாத எவரும் தமிழ் துரோகியாவார்கள் என்பதே புலிகளினதும் புத்தி ஜீவிகளினதும் நிலைப்பாடாக உள்ளது.

னர்கள் அனைவரும் மிகவும் பாதுகாப்பாக இந்தியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் எந்தவித துன்பதுயரங்களுமின்றி வசதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

புலிகளுக்கு ஆதரவாக தமிழ் முழக்கமிடும் காசி ஆனந்தன், ஈழவேந்தன், சச்சிதானந்தன் போன்றவர்கள் இந்தியாவிலே தொழிலை பார்த்து கொள்ளுகின்றனர். குமார்பொன்னம்பலமோ நிரந்தரமான கொழும்புவாசி. ருத்ரகுமாரன் போன்றவர்கள் தங்கள் தலைமுறைகளை அமெரிக்காவில் நிலை நிறுத்தி கொண்டிருப்பவர்கள்.

பாலசிங்கமும் ஒருவாறு தப்பி லண்டன் போய் சேர்ந்துள்ளார். ஆகமொத்தத்தில் இந்த புலிகளின் பேச்சாள பிரமுகர்கள் துன்பத்தில் அகப்பட்டிருக்கும் வன்னி மக்களுடன் வாழப்போவதுமில்லை. போர்முனையில் நிறுத்தப்பட்டிருக்கும் புலிப் பொடியன்களுடன் சேர்ந்து நிற்கப் போவதில்லை.

ஆயினும் வன்னி பிரதேசத்தில் ஒரு தமிழன் தானும் உயிருடன் இருக்கும் வரை தனது வக்கிர்மான யுத்தத்தை கைவிடும் எண்ணம் பிரபாகரனுக்கு இருப்பதாக தெரியவில்லை.

### யுத்தத்திற்கான சமாதானம்

இப்போது பிரபாகரனும், பிரபாகரனின் ஆட்களும், ஆதரவாளர்களும் தாம் சமாதானத்திற்கும். இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தவும் தயாராக இருப்பதாக பேசிவருகிறார்கள். அறிக்கை எழுதுகிறார்கள்.

1. திம்பு கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. இலங்கை இராணுவம் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

3. இலங்கை இராணுவம் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் நிபந்தனைகளாக ஏற்று எந்தவித நிபந்தனை ஏதுமின்றி புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்த முன்வரவேண்டும் என்று கூறி வருகின்றார்கள்.

த்தை தொடர்பான கூற்றுக்களில் நேர்மை ஏதாவது உண்டா என்பதே பலர் மத்தியிலும் உள்ள கேள்வியாகும்.

இவர்களின் சமாதானம், பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கள் எல்லாம் வெறுமனே யுத்த தயாரிப்புகளை மேற்கொள்வதற்கு தேவையான இடை வெளியை தேடுவதான முயற்சியே தவிர சமாதானத்தை நாடும் உண்மையான எண்ணத்தை பிரதிபலிப்பதாக இல்லையென்பதே பெரும்பான்மையோரினது அபிப்பிராயமாகும்.

### தொடர்ந்து தோற்கும் புலிகள்

எட்டாம் இலக்கத்தை கண்டால் பிரபாகரனுக்கு எப்போதுமே ஒரு அச்சம். எட்டாம் திகதியில் மேற்கொள்ளும் எந்த இராணுவ நடவடிக்கையும் வெற்றியளிப்பதில்லை என்பது பிரபாகரனின் நம்பிக்கை. எட்டாம் நம்பர்வீட்டிலோ எட்டாம் நம்பர் அறையிலே பிரபாகரன் தங்குவதில்லை.

பிரபாகரனின் எட்டாம் நம்பர் விவகாரத்தில் உண்மை உண்டோ இல்லையோ பிரபாகரனின் 44வது பிறந்த தினத்திலிருந்து பிரபாகரனின் நிலைமை இறங்கு முகமாகவே உள்ளது.

புலிகள் கடந்த பல மாதமாக தொடர்ந்து இராணுவ ரீதியாக வீழ்ச்சியை சந்தித்தேவருகின்றனர். இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்தை போலவே இப்போதும் புலிகள் முல்லை

அளம்பில் நித்திகைக்குளம் ஆகிய பகுதிகளை நோக்கி மிக விரைவில் ஒதுக்கப்படுவார்கள் என்றே தெரியவருகின்றது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் வவுனியா-யாழ்ப்பாணம் வீதியை திறப்பதற்கான போர் என்பதை இடை நிறுத்தி விட்டு “ரணகோஷ” என்ற பெயரில் மற்றொரு போர் முனையைத் திறந்தது.

இலங்கை இராணுவம் இரணை இலுப்பைக்குளம், மடு, பெரியமடு, பள்ளமடு என முன்னேறி விடத்தல் தீவு உட்பட 1500 ச.கி வன்னி பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிகிறது. ஒப்பீட்டு ரீதியில் புலிகள் ஆட்கள் வகையாகவும், ஆயுத வகையாகவும் பாரிய இழப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

### சந்தேகங்களை எழுப்பும் புலிகள்

இப்போது புலிகளின் பேச்சுக்களிலும் அறிக்கைகளிலும் தோல்வி உணர்வும், தம்மை பற்றிய நம்பிக்கையீனங்களுமே பிரதிபலிக்கின்றன.

காட்டுப் பகுதி கிராமங்கள் சிலவற்றில் புலிகள் நடத்திய கடந்த மேதின கொண்டாட்டத்தின் போது “தாங்கள் தோற்றுவிட்டால்” என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளனர்.

இப்போது தமது பல்வேறு துண்டு பிரசுரங்களிலும் “இலங்கை இராணுவத்திடம் தாங்கள் தோற்றால் தமிழ் மக்களுக்கே பெரும் இழப்பாகும்” என்று தமது தோல்வி நிலையை முன்னிலைப்படுத்தியே இலங்கை இராணுவம் பற்றி தமிழ் மக்கள் மத்தியில் பய உணர்வை கொண்டு செலுத்தப் பார்க்கிறார்கள். அந்த அடிப்படையிலே தமிழ் இளைஞர்களை தம்மோடு வந்து இணையும்படி கோருகின்றார்கள்.

### வாலறுந்த நரியின் ஊளை

“வெற்றிப் பாதையில் முன்னேறுவோம்” “வெற்றியை அடைவோம்” என்ற நம்பிக்கையை புலிகளின் தலைமை தமது சொந்த உறுப்பினர்களுக்கு கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாக தெரிகிறது.

தமது அழிவு நிச்சயப்படுத்தப்பட்டதென உணரும் புலிகள் தம்மோடு மேலும் எத்தனை பேரை சேர்த்துக் கொண்டு அழிந்து போகலாம் என்றே நினைக்கின்றார்கள்.

ஏனைய தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்களைத் தம்மோடு வந்து இணையுமாறு கூறும் மிரட்டல் அறிக்கை கூட புலிகளின் ஆள்பற்

கட்டான நிலமைகளையும் வெளிப்படுத்துகின்றன என்பது அரசியல் அவதானிகன் பலரது கருத்தாகும்.

### லண்டன் ஆர்ப்பாட்டம்

கடந்த மே மாதம் 25ம் திகதி புலிகள் சுதந்திர “தமிழீழ பிரகடனம்” செய்ய போகின்றார்கள் என்ற செய்தி பரவலாக அடிபட்டது. அவ்வாறானதொரு கதை பரப்பலின் அடிப்படையில் புலிகள் அந்த 25ம் திகதி லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு ஒழுங்கு செய்தார்கள். அந்த ஊர்வலத்தில் பத்தாயிரம் பேருக்கு குறையாமல் பங்கு பற்ற வேண்டுமென்ற நோக்கில் எல்லா ஏற்பாடுகளும் மேற்கொண்டார்கள்.

ஆனால் அந்த ஊர்வலத்தில் சில நூற்றுக்கணக்கானோர் பங்கு பற்றியது புலிகளுக்கு ஏமாற்றத்தை உண்டுபண்ணியது. பங்கு பற்றியவர்களில் பெரும்பாலானோர் எதுவித உற்சாகமும் காட்டாமல் ஏனோ தானோ என்ற வகையில் பங்கு பற்றியதானது புலிகளின் தீவிரமான லண்டன் ஆதரவாளர்களிடையே பெரும் விசனத்தை உண்டு பண்ணியது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தியதில் கூட தாம் தோல்வியை தழுவுவதை கூட தாங்கமுடியாத ஆதரவாளர்கள் “கிளிநொச்சி மாதிரி இன்னொரு இடத்தை புலிகள் கைப்பற்றினால் தவிர தங்களால் இனி ஆதரவு ஊர்வலம் நடத்த முடியாதென” புலிகளின் தலைமைக்கு தெரிவித்திருப்பதாக அறிய முடிகிறது.

### கனடா மாநாடு

லண்டனில் முடியாததை கனடாவில் செய்யலாமா? என புலிகள் முயற்சித்தனர். கனடாவிலும் தமக்கு சார்பாக தமிழ் மக்களை திரட்டி வீதிக்கு கொண்டுவருவது சாத்தியமில்லை என்றே கனடா புலிகள் அபிப்பிராயப்பட்டனர்.

இதனால் அவர்கள் கனடாவிலுள்ள ஒட்டாவா என்ற இடத்தில் தமக்கு ஆதரவாக “அறிஞர் மாநாடு” ஒன்றை நடாத்தினார்கள்.

இதில் பேச்சாளர்களாக கட்டுரை சமர்ப்பிப்பவர்களாக பங்கு பற்றியவர்களில் விரல் விட்ட எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்கு சமூகம் பற்றிய எந்த அறிவும் இருக்க வில்லை

வடக்கு கிழக்கு மாகாணம் பல்லாயிரக் கணக்கான அறிஞர்களை, நிபுணர்களை பல்வேறு துறையிலும் பெற்றெடுத்த பிரதேசம் அவர்களில் மிகப்பெரும்பான்மையானோர் வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளிலே தற்போது வசித்துவருகின்றனர்.






### பிரபாகரனின் சொந்தங்கள் எங்கே?

ஒரு தமிழன் உயிருடன் இருக்கும் வரையும் புலிகளின் போராட்டம் தொடருமென்றே புலிகள் கூறுகின்றார்கள். புலிகள் ஒரு தமிழனையும் விட்டு வைக்க மாட்டார்கள் என்பது இதன் அர்த்தமா?

பிரபாகரனின் அன்பு மனைவி, பிள்ளைகளும் பிரபாகரனின்

தாங்கள் சமாதானத்துக்கு தயாராக இருப்பதாகவும் சந்திரிகா அரசாங்கம் தான் சமாதானத்துக்கு தயாராக இல்லையென்றும், யுத்த மூலமான முடிவுக்கே முயற்சிப்பதாக குற்றம் சாட்டி வருகின்றனர்.

சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக புலிகளின் குழப்பம் ஒருபுறம் இருக்க குறைந்த பட்சம்

www.padippakam.com



அவர்களில் யாரும் தம்மை புலி ஆதரவாளர்களென ஆக்கிக் கொள்ளவோ அடையானம் காட்டிக் கொள்ளவோ தயாராக இல்லையென்பதையே புலிகளின் கனடா மாநாடு வெளிப்படுத்துகின்றது.

புலிகளின் கனடா மாநாட்டிலும் கூட புலிகளின் தீவிர ஆதரவாளர்களான குமார் பொன்னம்பலம், சதானந்தன், ருத்ரகுமாரன் போன்றோர் புலிகளின் திறமையின் மீது எந்த நம்பிக்கையும் தெரிவிக்கவில்லை. மாறாக தமிழர்களை காப்பாற்றுவதற்கு மேலைத்தேய நாடுகளின் இராணுவ ரீதியான தலையீட்டையே மாநாட்டில் பங்கு பற்றிய பலரும் கோரியுள்ளனர்.

மாநாட்டில் பங்கு பற்றியவர்களிடையே ஒரு தெளிவான அரசியல் நிலைப்பாடெதையும் காண முடியவில்லை.

ருத்ரகுமாரன் நேட்டோ அமைப்பு கொசோவில் தலையிட்டதை போல இலங்கையிலும் தலையிட வேண்டுமென்கிறார்.

அதேவேளை சதானந்தமோ இந்த ஏகாதிபத்திய நாடுகள் எல்லாம் தத்தமது சுயநலத்துக்காக சிறுபான்மை இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்திவிட்டு பின்னர் இடை நடுவிலேயே "அம்போ"எனகைவிட்டுவிடுகின்றனர் என்று மேற்கு ஐரோப்பிய மற்றும் ஐரோப்பிய நாடுகளை திட்டுகின்றார். நேட்டோவின் தலையீடு பயன்படாதென்பதே கூறாமல் கூறும் கருத்தாக உள்ளது.

குமார் பொன்னம்பலமோ இரண்டும் கெட்டான் நிலையில் திம்புவைப்பற்றி மீண்டும் மீண்டும் கூறி தமது நிலையை முடித்துக் கொள்கிறார்.

## நழுவிச் செல்லும் புலி ஆதரவாளர்கள்

தமது உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சாரத்துக்கு குமார் பொன்னம்பலத்தையே இன்று நம்பியிருக்கும் நிலைமை புலிகளுக்கு ஏற்பட்டிருப்பது புலிகளின் பலவீனமான நிலையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

புலிகளுக்கு ஆதரவாக இருந்த பலர் தமது நிலைகளை மாற்றிக் கொண்டுள்ளனர். புலிகள் எல்லா கோணங்களிலும் எல்லா தளங்களிலும் பின்னடைந்திருப்பதை அடையாளம் காணும் இவர்கள் தமது சொந்த சமூக பொருளாதார நிலைமைகளை காப்பாற்றிக் கொள்ளத்தமது பழைய நிலைப்பாட்டிலிருந்து நழுவிக்கொண்டிருக்கிறார்கள்.

புலிகளுக்கு ஆதரவாக இப்போதும் பேசிக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கும் ஏனைய தமிழ் புத்திசீவிகளும் மிகவிரைவில் தமது நிறங்களை மாற்றிக் கொள்வார்களென்றே தெரிகிறது.

இந்த புத்தி ஜீவிகள் தமிழிலும் தமிழர் மத்தியிலும் எதைத்தான் பேசிக்கொண்டாலும் என்னதான் [illegible]

அதிகாரிகள், அதிகாரத்திலுள்ள அரசியல் வாதிகள், மற்றும் அரசின் சிங்கள அதிகாரிகளோடும் ஏதோ ஒருவகையில் அந்தந்த நேரத்துக்கு தகுந்த காரணத்தை கூறிக் கொண்டு நல்லுறவை பேணி வருகின்றனர்.

இந்த புத்திசீவிகள் தமிழர்களுக்கு தமிழ்மொழியில் ஒருவிதமாக பேசுவார்கள். அதே வேளை சிங்களர்களோடு கமுக்கமாக கைகட்டி வாய் பொத்தி நின்றோ அல்லது அவர்களை குளிர்விக்கும் முகமாகவோ ஆங்கிலத்தில் வேறொரு விதமாக பேசி சொந்த அலுவல்களை கச்சிதமாக முடித்துக் கொள்வார்கள்.

புலிகளின் ஆதரவாளர்கள் புலிகளை மறுதலிக்கும் நாள் வெகு தொலைவில்லை. என்றே தோன்றுகின்றது. புலிகளை மறுதலிப்பது மட்டுமல்ல புலிகள் இதுவரை செய்துவந்துள்ள மக்கள் விரோத சமூகவிரோத நடவடிக்கையை தீவிரமாக கண்டிப்பவர்களாகவும், காட்டிக்கொடுப்பவர்களாகவும் மாறுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

## புலியில் புதிதாக சேர்வதுவும் குறைவு

யாழ்குடா நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் புலிகள் கடும் முயற்சியை மேற்கொள்ளுகின்ற பொழுதிலும் ஒரு பத்து இளைஞர்களைக்கூட சேர்க்க முடியாத நிலையில் உள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தமிழ் கிராமங்களில் கூட குறைந்த பட்சம் ஐந்து பேரையாவது சேர்க்க வேண்டுமென்று புலிகளின் தலைமை ஓர் ஆண்டுக்கு முன்பு தமது மட்டக்களப்பு அம்பாறை தலைவர்களுக்கு உத்தரவிட்டது. தீவிரமான. கடுமையான முயற்சிகளை அவ்விலக்கை நோக்கி மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் இன்னமும் கிராமத்துக்கு சராசரி ஓர் ஆள் என்ற அளவில்கூட சேர்த்து முடிக்க முடியவில்லை.

இதே காலகட்டத்தில் இலங்கை அரசாங்கமும் தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்கான அறிவிப்பை விடுத்து பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் தமிழர்கள் யாரும் நேரடியாக சேர்ந்ததாக தெரியவில்லை.

## விலகும்புலி மாயை

புலிகளுக்கு ஆதரவான நிலைமை என்பது தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறதென்பது ஒரு தற்காலிகமான மிக மேலோட்டமான ஒரு சமூக உளவியல் அம்சம் என்றே கூறுதல் வேண்டும்.

புலிகளுக்கெதிராக பேசலாம், செயற்படலாம் என்ற நிலை ஏற்படும் போதே உண்மையில் புலிகளுக்கு எந்தளவு ஆதரவு உள்ளதென்று வெளிப்படும்.

## நவீனம் தேடும் புதிய தலைமுறை

"இனவிடுதலைக்காக போராடக்க வேண்டும்" "சிங்கள இராணுவத்திற்கெதிராக போராட வேண்டும்" என்பதெல்லாம் இன்றைக்கு சிந்திக்கின்ற சிந்திக்கும் சூழலில் இருக்கின்ற இளம் தலைமுறையினரை ஈர்க்கின்றவையாக இல்லை. ஆயுதங்கள் மீதான கவர்ச்சி கூட இன்றைய இளைஞர்களிடையே மிக அருகிவிட்ட விடயமென்றே கூறவேண்டும்.

அதைவிட கம்யூட்டர் படிப்பது, வெளிநாட்டிற்கு வேலை தேடி செல்வது என்பதே தனக்கும் தான் வாழும் சமூகத்திற்கும் பயன் உடைய விடயமென்றே இன்றைய தமிழ் இளைஞன் கருதுகின்றான்.

## நிலைமையை புரிந்து கொள்ளும் ஆசிரியர்கள்

வன்னி காட்டுப் பகுதியில் கூட வேலையின்மை, வறுமை பட்டினி, ரேஷன் வாழ்க்கை என்ற நிலைமையை பயன்படுத்தி மட்டுமே புலிகளால் சில இளைஞர்களை திரட்ட முடிந்தது. பெரும்பாலும் கட்டாய ஆட்திரட்டல் முறை மூலம் மட்டுமே புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆட்களை அவ்வப்போது திரட்டிகொள்கின்றனர்.

புலிகள் ஆள்திரட்டுவதற்காக வன்னி பகுதியில், தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பாடசாலை தோறும், புலிகளின் போராட்டத்தில் இணையும்படி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் அடிக்கடி வகுப்பு நடாத்துகின்றனர்.

அந்த வகுப்புகளின் முடிவில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் "தம்பியவை நீங்கள் செய்யிறதெல்லாம் சரிதான். நாங்கள் உங்கட போராட்டத்திற்கு எல்லா ஆதரவும் தாறம் எங்கட பிள்ளைகளை விட்டுவிடுங்கள் எங்கட பிள்ளைகளின் பள்ளிக்கூட படிப்பை நிறுத்தாதீர்கள்" என்று பவ்வியமாக கூறி மாணவர்களை, பிள்ளைகளை புலிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

அதையும் மீறி புலிகள் வலுக்கட்டாயப்படுத்தும் போது இந்த ஆசிரியரும் பெற்றோரும் "வேணுமெண்டால் எங்களை கொலை செய்துபோட்டு எங்கட பிள்ளைகளை கொண்டு போங்கள்" என்று புலிக்ளின் எண்ணத்துக்கு மாறான போராட்டத்தையும் நடாத்தியுள்ளனர்.

எந்த மக்களுக்கு இடையே புலிகள் பெருந்தொகையான ஆயுதக்குவியைலயும், மோட்டார்களையும், ரொக்கட் லோஞ்சர்களையும் கொண்டு திரிகின்றார்களோ அந்த மக்களிடையே கூட புலிகள் மீதான நம்பிக்கை ஏற்படுத்த புலிகளால் முடியவில்லை. இவ்வளவுக்கு இந்த வன்னி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் பின்தங்கியவர்களாவர். பெரிய வசதி பற்றிய ஆசைகளோ தமது எதிர்காலம் பற்றிய அபிலாஷைகளோ இல்லாதவர்கள்.


இவ்வாறான நிலையில் இருப்பவர்களைக்கூட நம்ப வைக்க முடியாத படித்தவர்களை நாலு விடயமும் தெரிந்தவர்களை நல்லது கெட்டது தெரிந்தவர்களை உலக நிலைமை அறிந்தவர்களை நம்பவைப்பது என்பது இனிமேலும் சாத்தியமில்லை என்றே தெரிகிறது.

## இறுதிமூச்சா?

பிஸ்டல் குறூப்,சைக்கிள் குண்டு, மனித வெடிகுண்டு, மரத்தடிக்குண்டு என மறைவான சதி நாச வேலைகளினால் புலிகள் மேலுமொரு சிறு காலத்தை ஒட்ட முடியுமே தவிர முன்னேறும் வகையாக ஆக்கபூர்வமாக எதையும் சாதிக்கும் நிலையில் இப்போது புலிகள் இல்லை. புலிகள் இறுதி மூச்சை இழக்க தொடங்கிவிட்டார்கள். எப்போ புலிகளின் மூச்சு முற்றாக களருமோ அப்போ தாங்களும் கழுவுகின்ற தண்ணீரில் நழுவுகின்ற மீன் போல் கழன்று கொள்ளலாமா எண்றே புலிகளின் புத்தி மிக்க ஆதரவாளர்களும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நேசன்

புலிகள் ஆள்திரட்டுவதற்காக வன்னி பகுதியில், தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பாடசாலை தோறும், புலிகளின் போராட்டத்தில் இணையும்படி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் புலிகள் அடிக்கடி வகுப்பு நடாத்துகின்றனர். அந்த வகுப்புகளின் முடிவில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் "தம்பியவை நீங்கள் செய்யிறதெல்லாம் சரிதான். நாங்கள் உங்கட போராட்டத்திற்கு எல்லா ஆதரவும் தாறம் எங்கட பிள்ளைகளை விட்டுவிடுங்கள் எங்கட பிள்ளைகளின் பள்ளிக்கூட படிப்பை இடைநிறுத்தாதீர்கள்" என்று பவ்வியமாக கூறி மாணவர்களை, பிள்ளைகளை புலிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்கிறார்கள். அதையும் மீறி புலிகள் வலுக்கட்டாயப்படுத்தும் போது இந்த ஆசிரியரும் பெற்றோரும் "வேணுமெண்டால் எங்களை கொலை செய்துபோட்டு எங்கட பிள்ளைகளை கொண்டுபோங்கள்" என்று புலிகளின் எண்ணத்துக்கு மாறான போராட்டத்தையும் நடாத்தியுள்ளனர்.




மே 30இல், சர்வதேச மன்னிப்புசபை வெளியிட்ட கடிதத்தலைப்பின் முகப்புத்தோற்றம். தமிழ் புலிப்பயங்கரவாதிகளின் இரு குழந்தைப் போர் வீரர்களை காட்டும் இப்படம், எல்.ரி.ரி.ஈ யினது குழந்தைகளை படையில் சேர்க்கும் செயலுக்கு எதிரான போராட்டாத்தின் ஒரு பகுதியாக சர்வதேச மன்னிப்புச்சபை இக்கடிதத்தலைப்பை அனுப்பி வருகின்றது. லண்டனை மையமாகக்கொண்ட மனித உரிமைகள் அமைப்பு எல்.ரி.ரி.ஈ யினர் குழந்தை போர் வீரர்களைப் பயன்படுத்துவதை கண்டிப்பதுடன் பயங்கரவாதிகளுக்கு தங்களது அதிருப்தியை தெரிவிக்க மக்களையும் தூண்டிவருகின்றது.

# தமிழ் மக்களின் இன்றைய நிலை தொடர்பாக

தமிழ் மக்களின் இன்றைய நிலை தொடர்பாக யாரும் தீவிரமாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ் மக்கள் பேரழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

வட-கிழக்கில் தமிழர் வாழ்வு சிதிலமாகிப் போயுள்ளது. தமிழர்களின் வாழ்வு மாத்திரமல்ல முஸ்லீம் மக்களின் வாழ்வு கூட அப்படித்தான். 1990இல் யாழ்குடா நாட்டிலிருந்தும் வடபகுதியிலிருந்தும் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களில் பெரும்பகுதியினர் புத்தளம் அனுராதபுரம் போன்ற இடங்களில் சொல்லொணா வேதனைகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

வடகிழக்கின் பிரச்சினைகளுக்காக இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் முன்னர் எப்போதையும் விட அதிகமாகவே காணப்படுகிறது. அன்றாடம் தென்னிலங்கை சென்று கொண்டிருக்கும் யுத்த முனையில் மரணித்துப்போன இளைஞர்களின் உடல்கள் எல்லாமே மக்கள் மத்தியில் விரக்தியையும் வேதனையையும் எஞ்ச வைத்திருக்கிறது.

இந்த பேரவலச் சூழ்நிலையில், இந்த நாட்டின் மனிதர்கள் மனிதர்களாக வாழ்வதற்கு நாம் என்ன பங்களிப்பை செய்ய முடியும்? இந்த நாட்டின் முற்போக்கான அரசியல் சக்திகள் ஜனநாயக, உரிமை வாதிகள் அத்தனைபேருக்கும் அந்தப் பொறுப்பும் கடமையும் உண்டு. ஆனால் எல்லோருமே கையறு நிலையில் தத்தமது வெறுப்பையும் விரக்தியையும் காட்டுவதாகவே இன்றைய நிலமை ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நிலமை நாட்டுமக்கள் அனைவரையுமே நோயில் விழுத்தி விடும்.

எனவே யாவரும் விழிப்புடன் செயற்பட வேண்டிய அவசியம் உள்ளது. இந்த நாட்டின் தேசிய இனம் ஒன்று அழிந்து கொண்டிருக்கையில் நாடே யுத்த சாகரத்தில் அமிழ்ந்துகொண்டிருக்கையில் எமது வாழா இருப்பு ரோமாபுரி தீப்பற்றியெரிகையில் நீரோ பிடில் வாசித்த கதைதான்.

அப்படியானால் நாம் என்ன செய்வது? இப்போது பேருருக்கொண்டு தாண்டவமாடும் யுத்தம் தமிழ்மக்களை அவர்களின் பிரதேசங்களிலேயே சமாதி கட்டியுள்ளது. உலகம் முழுவதும் உள்ளூரிலும் திதறுண்டு போகச் செய்துள்ளது.

எனவே தமிழ்மக்கள் போராடுவதற்கு எவை காரணிகளாக இருந்தனவோ அவற்றை நேர்மையுடன் கண்டறிய வேண்டும். அந்த நேர்மையான முயற்சிகள் எதுவுமே [illegible] நிறைந்த வரலாறாகும்.

கடந்த காலத்தில் தீர்வுக்கான முயற்சிகள் கூட இதயசுத்தியுடன் மேற்கொள்ளப் படவில்லை. அவை காலத்துக்காலம் கிழித்தெறியப்பட்டன. இந்த 50 ஆண்டு கால நம்பிக்கையீனங்கள் களையப்படவேண்டும்.

கடந்த 50 ஆண்டுகாலத்தில் தமிழ்மக்களிற்கு நியாயபூர்வமான பிரச்சினைகள் உள்ளன; இவை தீர்வுகாணப்படவேண்டியவை; என்ற பிரச்சாரம் இயக்கங்கள் 1994 களுக்கு பின்னரே முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

அதனை முன்னெடுத்துச் சென்ற சக்திகள் தான் இன்று விரக்திற்குள்ளாக்கியுள்ளன. வடகிழக்கில் யுத்தமும், பாசிசமும் தீர்வு தொடர்பான எந்தக் கருத்தாடலும் நடைபெறுவதற்கிடமளிக்கவில்லை. இதனால் வட-கிழக்கிலிருந்து ஈனஸ்வரத்திலேயே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. முதலில் வடகிழக்குத் தமிழ்மக்கள் வாய்திறந்து பேசுவதற்குரிய நிலவரங்கள் தோற்றுவிக்கப் படவேண்டும்.

வடகிழக்குத் தமிழ்மக்கள் பேசமுடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதற்காக பத்திரிகைகளோ அல்லது ஏனைய மீடியாக்களோ மௌனமாக இருக்க முடியாது. அவர்கள் பிரச்சினைகளை பாதி உண்மையாகவும் பாதி பொய்யாகவுமே கூறுகிறார்கள். ஒரு பகுதி முழு உண்மை குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் உண்மைகளை எவ்வாறு வெளிக்கொண்டு வருவது?

மூன்றாத் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த தென்னாபிரிக்காவின் இலங்கை இந்தியா தூதுவரான மட்சிலா அவர்கள் குறிப்பிடுகையில் இலங்கையின் சாதாரண மக்களும் பேச்சுவார்த்தைகளில் சம்பந்தப்பட வேண்டும்.

அரச தலைமைத்துவத்திலிருந்து கிராமவாசிகள் வரை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும். சகல மக்களும் இன, மத, மொழி, சமயபேதமின்றி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவேண்டும். சமாதானச் செயல் முறைகளில் சகல மக்களும் கலந்து கொள்ளவேண்டும். தீர்வுத்திட்டம் அல்லது சமாதானமுயற்சி குறித்து வெளிப்படையாகப் பேசுவதற்கு ஒருவரும் எவ்வித பயப்பிராந்தியும் இன்றி சகல மக்களும் இது குறித்து பேசிக்கொள்ள கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டும் [illegible]

படிப்பகம்

www.padippakam.com



# கவலை நிறைந்த நெஞ்சமுடன்....

## இலை மறைகாய்

தெல்லிப்பழைச் சந்திக்கு அருகில் வீதியில் பெரும் தீச்சுவாலை தெரிந்தது. அருகாகப் போய்ப்பார்க்க மனம் அவாவினாலும் ஆயுத பாணிகளான சிலர் தடுத்தனர். வெறித்தனமான கோபத்துடன் காணப்பட்ட அவர்கள் நீயும் ரெலோவின்ரை ஆளோ? என்று கூறியபடி என் மீது சீறிப் பாய்ந்தனர். இல்லையில்லை எனக் கூறினேன்.

ஓடுடா திரும்பிப் பாராமல் என்ற கட்டளை செவியில் பட்டதும் சைக்கிளைத் திருப்பி கொல்லங்கலட்டிக்கு விரைந்தேன். கொல்லங்கட்டியில் தான் ரெலோவுக்கும் புலிகளுக்கும் மோதல் நடப்பதாகவும் ரெலோவினர் சிலரது சடலங்கள் தான் தெல்லிப் பழையில் தீ மூட்டப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன். இது நடந்தது 1986ன் நடுப்பகுதியில்.

சரியாக அதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 1983ல் பொலநறுவைப் பகுதியில் ஆசிரியராக நான் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது நாடெங்கும் வெடித்த ஆடிக் கலவரத்தின் தாக்கங்களையும், விளைவுகளையும் நேரில் அனுபவித்த படி வவுனியாவுக்கு வந்து சேர்வதற்கிடையில் நான் பட்டபாடு வாழ்நாளில் மறக்க முடியாதது.

இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும் எங்கள் பாரம்பரிய பிரதேசங்களுக்கு அப்பால் நிரந்தர வதிவிடம் தேடுவதில்லை என்ற முடிவுடன் குடாநாட்டுக்கு திரும்பியிருந்தேன்.

ஆனால் அடுத்த மூன்று ஆண்டுகளில் எமது மண்ணில் எனது கண்களுக்கு எதிரேயே மனிதப் படுகொலை நடப்பதைக் காண வேண்டி நேர்ந்துவிட்டது. ஆயுதங்களின் அராஜகம் எங்கள் மண்ணில் தாண்டவமாடியதைக் கண்கூடாகக் கண்டதும் பற்கள் கெட்டித்துக் கொண்டது. மனம் துக்கத்தால் வெட்கித்தது. சோகம் நெஞ்சைக் கவ்வியது. கண்கள் குளமாகியது. ஊர்காவற்துறையிலிருந்த எனது வீட்டுக்குத் திரும்பினேன்.

அத்தருணத்தில் புலிகளுக்காக எமது ஊரில் பணிபுரிந்து வந்த சொரூபன் எனக்கு ஒரு வகையில் மைத்துனர். புலிகளுக்காக சில உதவிகள் தேவை என்று எனது மனைவியிடம் கேட்டிருந்தார். அதற்காக அவர் எனது வீட்டுக்கு வந்த போது எனக்குள் சினம் முட்டியது. மனிதாபிமானத்தையே மறந்து அரக்கத்தனம் குடிகொண்டிருப்பதாக அவனிடம் சுட்டிக்காட்டினேன். உணர்ச்சிகளால் முறுக்கேற்றப்பட்டு உள்ளத்தை அவர்களிடம் காவு கொடுத்திருந்த அவனுக்கு நான் குறிப்பிட்ட விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தியதாக இல்லை "ரெலோவினர் துரோகிகளாகி விட்டனர். அவர்களைக் கொன்று குவிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று வாதாடினான்.

"ஆயுதங்கள் அபரிமிதமாகி அட்டகாசம் மலிந்து விட்டதால் அடக்குவதைத் தவிர வேறு வழியில்லை" என்றான். அவர்களை அடக்குவதற்கு உங்களுக்கு அதிகாரம் தந்தது யார் என்று கேள்வி எழுப்பினேன். தலைவர் சொல்லி விட்டார் செய்கிறோம். என்பது தான் அவனது பதிலாக இருந்தது.

எனினும் அவனது பதில் எனக்குத் திருப்தி தருவதாக இருக்கவில்லை. ஆனாலும் ஒரு சில வருடங்களுக்குள்ளேயே அவனுக்குள் மாற்றம் தெரிந்தது. நான் துண்டு கொடுத்து விலகி விட்டேன். எனக் கூறிக்கொண்டு வந்து என் முன் நின்றான். அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தேன். இருந்தாலும் பொதுநல சிந்தனையோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் வளர்ந்த ஒரு இளைஞனை மண்ணிலிருந்து துரத்திவிடுவது போலவே உணர்ந்தேன்.

எனினும் எனக்கு அது இப்போது குற்றமாகப் படவில்லை. ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தால் அழிந்ததை விடவும் அதிகமாகவே புலிகளின் பாசிசவாதப் போக்கால் எங்கள் இனம் இழந்து போய் விட்டது. அமிர்தலிங்கம் முதல் பல்வேறு தமிழினத் தலைவர்களும் புலிகளின் தலைமைத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கியதாலேயே படுகொலை செய்யப்பட நேர்ந்தது. தமிழினத்தின் ஒட்டுமொத்தமான நலன்களை விடவும் எதிர்கால நல்வாழ்வை விடவும் தமது தலைமைத்துவ நலன்களை பாதுகாப்பதிலேயே புலிகள் குறியாகவுள்ளனர் என்பதுவே என் அபிப்பிராயம்.

இருந்த போதிலும் இந்தியப்படையினர் வெளியேறியதன் பின்னர் குடாநாடு புலிகளின் கட்டளைக்கு கட்டுப்பட்டிருந்த காலத்திலும் நான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தேன்.

1990ன் இறுதியில் தீவுப்பகுதியப புலிகள் கைவிட்டபோது யாழ்ப்பாண நகருக்குள் குடிபுகுந்தேன். இருப்பிடம் இழந்து அலக்கழிந்த போதும் இராணுவத்தை விரட்டியடித்து விடுதலையை வென்று விடலாம் என்ற கனவுகளில் மிதந்தேன்.

சீறி வந்த எறிகணைகளுக்கும், விமானம் பீச்சிய குண்டுகளுக்கும் தப்பி கற்பனைகளை வளர்த்தேன். போர் மூலமான வெற்றி சாத்தியம் என்றே நம்பினேன். இந்த வகையில் புலிகள் கேட்ட உதவிகளை எம்மால் முடிந்தவரை நிறைவு செய்தோம்.

ஆனாலும் கற்பனைகள் நொருங்கிச் சிதற நம்பிக்கைகள் உடைந்து போக குனிந்த தலையோடும் நெஞ்சு நிறைந்த சுமையோடும் மீண்டும் வலிகாமம் திரும்ப நேரிட்டுவிட்டது. பொன்னாயும் பொருளாயும் புலிகளுக்கு கொட்டிக் கொடுத்தவை எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்ட கவலைதான் இப்போது நெஞ்சத்துக்குள் நிறைந்துள்ளது.

இந்த நிலையில் என்றாலும் புலிகள் தமது குறுகிய சுயநலவாதப் போக்கிலிருந்து விடுபட்டாக வேண்டும் என்பதுவே என் கருத்து. ஆயுதப் படையினரை எதிர்த்து போர் புரிவது மட்டும் தான் போராட்டம் என்ற நிலையிலிருந்து புலிகள் மாறியாக வேண்டும். அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் பதவிச் சுகங்களை அனுபவிப்பதற்கான ஏற்பாடுகள் என்ற எடுகோளிலிருந்து விடுபட்டாக வேண்டும்.

அரசியலில் ஈடுபடுபவர்கள் சுயநலப்பேர்வழிகள் என்று முத்திரை குத்த புலிகளுக்கு எந்த யோக்கியதையும் இல்லை. ஏனெனில் 1990ல் பிரேமதாசா அரசுடன் கைகோர்த்துக் கொண்டு தமிழ் இளைஞர்களைத் தேடித் தேடி வேட்டையாடிவர்கள். இவர்களுக்கு இலங்கைத்தீவின் அரசியல் ஒருமைப்பாட்டைப் பேணவும், உத்தரவாதப்படுத்தவும் முயல்பவர்களைக் குற்றம் சுமத்த எந்த அருகதையும் இல்லை.

தமது தலைமைத்துவத்தை நிராகரிப்பவர்களை அந்நிய மண் வரை துரத்திச் சென்று கொன்று குவிப்பதையே முதல் இலக்காக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த மண்ணில் தான் இறுதி வரை வாழ்வது என்ற முடிவுடன் துன்பங்களை–துயரங்களை சுமந்தபடி வாழ்பவர்கள் மீது குறை கூற எந்தத் தகுதியும் இல்லை.

ஒட்டுமொத்தத்தில் தமிழினத்தின் அரசியல் ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைத்துக் குலைத்ததும், அழிவின் விளிம்பு வரை மக்களை இட்டு வந்து அகதி வாழ்வு என்னும் அவல நிலமைக்கு வழிகாட்டியதும், உதவிட முன்வந்த இந்தியாவை விரோதித்து பகைமையுணர்வுடன் பார்க்க வைத்ததும், புலிகளின் போக்குகளே. இத்தகைய அரசியல் வழிகாட்டல்களிலிருந்து தமிழினம் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதுவே எனது எண்ணமாகும். ●

---

# சொலமன் பதில்கள்

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நெல்சன் மண்டேலா அவர்களைச் சந்திக்கப் போகிறார் என்று கதை அடிபடுகிறதே?
எஸ். ஞானபண்டிதர், சுன்னாகம்.

**பிள்ளையார் சிவபெருமானிடம் மாம்பழம் வாங்கிய கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது. முருகன் உலகை சுற்றி வந்து வாங்காததை பிள்ளையார் அம்மையையும். அப்பனையும் சுற்றிவிட்டு வாங்கினார்.**

**கதிர்காமர் உலகம் முழுவதும் சுற்றி அரசுக்கு ஆதரவு திரட்டிக்கொண்டிருக்கையில் இது பலே ஐடியாத்தான்.**

சிங்கள வீரவிதானாவின் இனவிரோத செயற்பாடுகளை ஜே.வி.பி கண்டித்துள்ளதே?
சி. மலைச்சாமி, யாஎல.

**ஆம் 1983ல் தமிழர் விரோத இனவன்முறையை உருவாக்கிவிட்டு ஜே.ஆர் ஜே.வி.பியின் தலையில் கட்டிவிடவில்லையா. பழி ஓரிடம் பாவம் ஓரிடம். இத்தகைய மோசடிகளை தடுக்கும் ஒரு முன்னேச்சரிக்கையே பாராட்டத்தக்க அறிக்கை.**

புலிகள் தம்மால் துரோகிகள் என அழைக்கப்படும் இயக்கங்களின் உறுப்பினர்களை தம்முடன் வந்து இணையுமாறு அழைக்கிறார்களே?
க. சண்முகவடிவேல், மட்டக்களப்பு.

**குளக்கரையில் பொற்காப்புடன் கிழப்புலி நீராடிவிட்டு வந்து தனது தருமத்தை பெற்றுச் சொல்லச்சொன்ன கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது.**

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இனால் நடத்தப்பட்ட பேரணி எதனை வலியுறுத்துகின்றது?
க. கணேசன், வவுனியா.

**முக்கியமான இரண்டு விடயங்களை 1. மக்கள் போராட தயாராக இருக்கிறார்கள் என்பதை 2. மக்கள் சகோதரப்படுகொலைக்ளை வெறுக்கிறார்கள் என்பதை.**

நடந்த முடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்தி என்ன?
என். நிசார், திக்குவெல்ல.

**பொதுஜன முன்னணியின் ஆதரவுத்தளம் அரும்பொட்டில் இருக்கிறது என்பதை.**

கொழும்புப் பல்கலைக்கழகம் இனப்பிரச்சினை தொடர்பாக நடத்திய கருத்துக்கணிப்பு முடிவுகள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?
எஸ். நளாயினி, வெள்ளவத்தை.

**1. இனவாதப்பருப்பு இனிமேலும் வேகாது 2. இலங்கையின் பெருவாரியான மக்கள் நாகரிகமானவர்கள் அவர்கள் [illegible]**

சூரியகந்தை, செம்மணி, துரையப்பா விளையாட்டு அரங்கு புதைகுழிகள் பற்றி?
ப. குருபரன், யாழ்ப்பாணம்.

**முன்னர் நமது நாட்டில் தொல்பொருள் ஆய்வுகளுக்காகவே நிலம் அகழப்பட்டது. தற்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் எலும்புக்கூடுகளை தேடி நிலம் அகழப்படுகிறது.**

**கடந்த 20 வருடங்களில் நாடு எவ்வளவு தூரம் பயங்கரமாக சீரழிந்து உள்ளதென்பதற்கு இந்த எலும்புக்கூடுகள் தேடும் படலம் ஓர் அளவுகோல்.**

**கம்பூச்சிய, ஆப்கானிஸ்த்தான், றுவண்டா, பொஸ்னியா, கோசோவா வரிசையில் எமது நாடும் சேர்ந்து விட்டது.**

இந்தியாவின் கார்க்கில், டிராஸ் பகுதிகளில் பாகிஸ்தானின் ஊடுருவல் பற்றி?
எல். விசாலாச்சி, திருமலை.

**இன்று போய் போருக்கு நாளைவா என்பதுபோல் 1971ல் பாகிஸ்தான் இராணுவம் பட்ட அவமானங்களுக்கு வன்மம் தீர்க்கும் முயற்சியோ என்னவோ.**

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஐக்கியத்தை வலியுறுத்துவதற்கு பாடசாலை புத்தகங்களில் ஏதாவது இருக்கிறதா?
ஏ. தயாபரன், காரைதீவு.

**அதுதான் இரண்டாம் ஆண்டு புத்தகத்தில் இருக்கிறதே சண்டையிடும் சகோதரர்களுக்கு தனித்தனியே தடியைக்கொடுத்து முறிக்கச்சொன்ன தந்தை பின்னர் மூன்று தடிகளை ஒன்றாக அந்த மூன்று சகோதரர்களுக்கும் முறித்துப் பார்க்க சொன்ன கதையிருக்கிறதே.**

தமிழ் இயக்கங்கள் தமக்குள் சண்டையிடுகையில் தமிழ் மக்களுக்கு விடுதலை?
சி. குமாரசிங்கம், மட்டக்களப்பு.

**பாரதியின் கவிதை வரிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன. "சாதிச்சண்டை போச்சோ உங்கள் சமயச்சண்டை போச்சோ குப்பை விரும்பும் நாய்க்கே பவிசு கொற்றத் தவிசும் உண்டோ"**

டாக்டர்கள் சுகாதார சேவை அதிகாரங்கள் மாகாணசபையிடம் வருவதை விரும்பவில்லையே மத்திய அரசிடம் தான் அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்கிறார்களே?
க. கனகசுந்தரம், யாழ்ப்பாணம்.

**குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும். போலும்.**

பாதுகாப்புச் செலவினங்கள் சிலரைப் பணக்காரர்களாக்கி உள்ளதாமே?
ஆர். இராசகுலேந்திரன், பருத்தித்துறை.

**ஆத்தில போற தண்ணிய ஐயா குடி அம்மா குடி கதைதான்.**

தீர்வுத் திட்ட யோசனைகள் பற்றிய கதைகள் தேர்தல் ஆரவாரங்களுடன் மறைந்து விட்டதே?
எஸ். சிமியோன், மன்னார்.

**மூன்று, நாலுவருடங்களுக்கு முன்னர் மரணித்தவரை நெடுக யோசித்து யாரும் அழுதுகொண்டிருப்பார்களா.**

குளோனின் முறை மூலம் ஒரு விலங்கைப்போன்று அச்சொட்டான குணங்களைக்கொண்ட இன்னொன்றை உருவாக்கலாம் என்கிறார்களே?
க. நவீனன், பேசாலை.

**அது இப்போதைக்கு எமது நாட்டுக்கு வேண்டவே வேண்டாம். இப்போது இருக்கும் நிலையில் சிலர் திரும்பத்திரும்ப உருவாக்கப்பட்டால் நாடு சுடுகாடாகிவிடும்.**

தமிழர்களுக்கென்று உருவாக்கப்பட்ட பாஸ் நடைமுறைபற்றி?
ஆர். தெய்வேந்திரம், கொழும்பு.

**இருதயம், மூளை போல தமிழர்கள் உயிர்வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட பிரத்தியேக உறுப்பு.**

இலங்கையின் கிரிக்கெட் கப்டன் அர்ஜனாமீதும், இந்தியாவின் அசார்மீதும் வைக்கப்படும் விமர்சனங்கள் பற்றி?
க. சயந்தன், வவுனியா.

**உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும்.**

**உன் நிலமை கொஞ்சம் இறங்கிவந்தால் நிழலும் கூட மிதிக்கும்.**

படிப்பகம்

www.padippakam.com



# மண்ணுக்குள் புதைந்த மானிடம்

கிருஷாந்தி பாலியற் பலாத்காரப் படுகொலையில் மரண தண்டணை விதிக்கப்பட்ட சோமரத்தன ராஜபக்ஸவின் கண்கண்ட சாட்சியங்களிலிருந்து செம்மணிப் புதை குழிகள் உயிர்பெற்றுள்ளன.

உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்துள்ளன. வரம்பற்ற அதிகாரம் என்பதே தறிகெட்ட போக்கிற்கு வழி வகுக்கின்றது.

பிரபல மனித உரிமை வாதி புஞ்சிஹேவா அவர்கள், அறிவுள்ள பெற்றோர்கள் அறிவற்ற எந்



முதல் தடவையாக ஆணொருவரின் எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அரியாலையில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த குடும்பப்பெண் ஒருவர் அழைத்துச் செல்லப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு அடித்துச் கொல்லப்பட்டிருக்கிறார். இவ்வாறு பிளேட்டினால் கழுத்தறுக்கப்பட்டு யாழ் செயலகத்துக்கு அண்மையில் புதைக்கப்பட்டவர்கள் பற்றியெல்லாம் பலவிடங்களை ராஜபக்ஸ கூறியுள்ளான்.

புதைகுழி மர்மங்களை வெளிக்கொணர்வதில் மரண தண்டனைக் கைதி ராஜபக்ஸவின் சாட்சியங்கள் ஒரு குறிப்பிடத்தகுந்த பாத்திரத்தை வகித்தாலும் ராஜபக்ஸ, இதில் மனித உரிமைவாதியாகி விட அனுமதித்துவிட முடியாது. ஆனால் எமது தகவல் தொடர்புச் சாதனங்கள் அதனைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

செம்மணியில் நடந்த காட்டுமிராண்டித்தனங்களில் சம்பந்தப்பட்டவர்கள் என ராஜபக்ஸவால் கூறப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதாக இதுவரை தெளிவான செய்திகள் எவையும் இல்லை.

**சூரிய கந்தை, எம்பிலிப்பிட்டியாவில் இருந்த மனிதப் புதைகுழிகள் தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் எத்தகைய அக்கறைகொண்டிருந்தார் என்பது யாரும் அறியாததல்ல. பாடசாலை மாணவர்களைப் புதைகுழிக்கனுப்பியவர்களின் பெயர் விபரங்கள் படங்கள் உடனடியாகவே பத்திரிகைகளில் வெளிவந்தன.**

**ஆனால் செம்மணிப் புதைகுழியில் நிர்வாணமாக பெண்களை அடித்துச் கொன்ற அயோக்கியர்கள், நூற்றுக்கணக்கான அப்பாவிகளின் கொலைக்குப் பொறுப்பானவர்களை வெளிச்சத்துக்குக்கொண்டு வருவதில் இழுபறி ஏன் என்பதுதான் இங்கு பிரச்சினை.**

இந்த மாதிரியான மிலேச்சர்களைப் பற்றிய தகவல்கள் வெளிவருவதற்கு எவ்வளவு தாமதம் ஏற்படுகிறதோ அந்தளவுக்கு இந்த நாடு காட்டு மிராண்டித்தனத்தை நோக்கிச் செல்வதாகவே நாம் அர்த்தப்படுத்திக்கொள்ள முடியும்.

என்ன நேர்த்திருக்கிறதென்றால் 25 வருடத்திற்கு மேலான அவசரகாலச் சட்டமும் 20வருடங்களாக நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத்தடைச் சட்டமும் இராணுவப், பொலிசின் இத்

தத் தராதரமுமற்ற இராணுவத்தினரின் காலில் விழுந்து தமது பிள்ளைகளின் உயிருக்கு மண்டாடியதாகக்குறிப்பிட்டிருந்தார். 88, 89 இல் தென்பகுதிப்பயங்கரங்களைப் பற்றி ரூபவாகினி தொலைக்காட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றிலே அவர் அவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனால் அறிவுள்ள ஒரு சமூகம் இன்று சகல திருப்புமுனைகளிலும் தற்குறிகளாக இருக்கக்கூடிய பேரினவாத, குறுங்குழுவாத சக்திகளுக்கு அடிபணிந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதே. இதைப்பற்றியாரும் அலட்டிக்கொண்டது கிடையாது.

ஆனால் மாதமாதம் அவசர காலச் சட்டத்திற்கு கையுயர்த்துவதுடன் அல்லது எந்த அபிப்பிராயமும் தெரிவிக்காது வெளிநடப்புசெய்வதுடன் சில தமிழர் தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் காலம் கழிகிறது. உணர்வு பூர்வமான தாக்கமான எதிர்ப்பெதுவும் காட்டப்படவில்லை.

மாற்றுக்கொள்கைக்கான நிலையம் செம்மணி எம்பிலிப்பிட்டிய புதைகுழிகள் பற்றி விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றை நடாத்தியது. ஆனால் பெருமளவு மனித உரிமை ஆர்வலர்கள் இதில் பங்குபற்றவில்லை. மனித உரிமைகளில் அக்கறையுள்ள பலர் உரையாற்றினார்கள்.

இந்தக்கட்டத்தில் மனித கௌரவத்திற்கான மன்றத்தின் தலைவர் மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள் உரையாற்றியபோது பிரான்சில் இருந்த திரும்பி வந்த ஒரு இளம் பெண் எவ்வாறு கொழும்பில் உள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் வைத்து மூர்க்கமாகத் தாக்கப்படதையும் அந்தப் பெண்ணுக்கு நடந்த சித்திரவதைகளையும் எடுத்துரைத்தார்.

இங்கேயே இப்படி என்றால் தொலை தூரக்கிராமங்களில் என்ன நடக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.


ஆனால் இன்னுமொருபக்கம் மாற்று அரசியல் கருத்துடையோரையும், தமக்கு விரோதமானவர்கள் எனக்கருதப்படுவோரையும் உடல் மீதியின்றி அழிக்கும் போக்கு எமது சமூகத்தில், பாசிசசக்தி ஒன்றினால் கடந்த 15வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச் சக்தியின் சிறையிலிருந்த 4000 தமிழர்களுக்கு என்ன நடத்தது என்பது பற்றி யாரும் மூச்சுக்காட்டுவதில்லை.

அரசு தவிர்ந்த ஏனையவர்களின் வன்முறைகளை இந்த மனித உரிமையமைப்புக்கள் வசதியாக மறந்து விடுவது ஒரு மாபெரும் குறைபாடாகும்.

சகல மனிதப் புதைகுழிகளும் தோண்டப்படவேண்டும். இந்த நாட்டில் சகல தரப்பினராலும் காணாமல் போனவர்கள் பற்றிய



# குறுக்கெழுத்துப் போட்டி–44



## இடமிருந்து வலம்

1. இலங்கையில் அங்கங்கே புதிதுபுதிதாய் எலும்புக்கூடுகள் முளைக்கும் இடம்.
4. இந்தக் குழலிலிருந்துதான் அதிகாரம் பிறப்பதாக மாவோ சொன்னார். நம்நாட்டில் இதனால் அவலங்களும் அதிகம் விளைகின்றன.
8. ஆபாசம். (குழம்பி)
10. பொருந்தும், ஏற்கக் கூடியதுதான்.
11. பூமி.
12. தேர்ச்சி பெற்றவரின் சமையல். (தலைகீழ்)
14. 'கம்' சேர்த்தால் மகிழ்ச்சி.
15. தீயாரைக் காண்பதுவும் --.
17. அடித்து ஒலி எழுப்பக்கூடிய பெரிய வட்டவடிவ தோல் வாத்தியம்.
19. பங்கீடு. (தலைகீழ்)
21. செம்மஞ்சள் நிறச் கதைப்பகுதி கொண்ட பழம் அல்லது அந்தப் பழத்தின் மரம்.
22. 24 நிமிடம் கொண்ட ஒரு கால அளவு. (பெரும்பாலும் பஞ்சாங்கத்தில் பயன்படுத்தப்படுவது)
23. காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருவது. பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதி.
25. இப்போது.
26. திமிர், செருக்கு.
28. வெற்றிபெற, வேந்தனுக்கு இருக்க வேண்டியது.
29. போட்டி (குழம்பி)
30. மேளத்தின் ஒலி.
31. குணமறிந்துதான் இதற்குக் கடவுள் கொம்பு வைக்கவில்லை என்பர்.
32. சிறுமலை.

## மேலிருந்து கீழ்

1. தீவுப் பகுதியில் ஓர் ஊர்.
2. யாரையாவது கண்டவுடன் முதலில் விசாரிப்பது இது.
3. தாமரைக் கண் (தலைகீழ்)
4. 'பி' சேர்த்தால் பறக்கும்; 'பு' சேர்த்தால் திரித்துக் கயிறாகும்; 'பை' சேர்த்தால் பூவாகும்.
5. காலின் கீழ்ப்பகுதி.
6. கிராமத்திற்கு முன்னால் இதைச் சேர்த்தால் மிகச்சிறிய கிராமமாகி விடும். (தலைகீழ்)
7. சம்பளத்தோடு இதையும் லஞ்சமாக பெற்றுக் கொள்பவர்கள் உண்டு.
9. இந்திரன் சபையில் ஆடுபவர். ஒரு தமிழ் நடிகை.
13. நிகழ்ந்துகொண்டிருப்பது. பேச்சு வழக்கில் திமிர்.
14. பொய் வதந்தி.
16. கூடாத வாசனை.
18. கிருஷ்ணரின் மனைவியரில் ஒருவர் தலைகீழாக.
20. துணியில் விழுந்த பொத்தல்.
21. சந்ததி.
23. முதலெழுத்தில்லாத நளன் மனைவி.
24. சிறியதாயிருந்தாலும் இதனுள்ளிருப்பது விருட்சம்.
25. அரிசியின் மேல் தோல்.
26. இதனூடு நீர் பாயும். முதுகில் வேலையற்ற வாலிபர் குந்தியிருந்து பேச வசதியளிக்கும் இடம்.
27. மாளிகை, அரண்மனைகள் அமைப்பதில் சிறந்த தேவ தச்சன்.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி–43 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. இங்கிலாந்து | 1. இறுமாப்பு |
| 4. பதவி | 2. கிருதயுகம் |
| 7. வைகுண்டம் | 3. துவை |
| 9. மாத்தறை | 4. பண்டகசாலை |
| 11. பட்டறை | 5. சட்டத்தரணி |
| 12. யுவராஜா | 6. விம்பம் |
| 14. கரம் | 8. குறை |
| 15. புளுகன் | 10. (இ)றைவன் |
| 17. சாணி | 13. ஜாதகம் |
| 18. தாம் | 16. சித்தாளு |
| 19. ஊக(ம்) | 19. ஊடுருவல் |
| 20. பசலை | 21. பகடை |
| 22. உடும்பு | 22. உதிரி |
| 24. கத்(தி) | 23. புடல் |
| 25. பசித்திரு | 25. படகு |
| 27. பால் | 26. பத்து |
| 29. பரிவட்டம் | 28. பாம்பு |
| 30. குத்து 31. புழுதி | |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

சாயிவித்ஷா பேரின்பநாயம்
இல;10, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. ஏ.வி. சில்வெஸ்ரர்
   இல;5, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
2. தா. மனோ
   இல;367, நம்பைக்குளம், வவுனியா.
3. ஏ. பெஞ்சமின்
   பிரதேச செயலகம், மன்னார் நகரம்.
4. க. ஜெயதீஸ்வரன்
   நேரியகுளம், வவுனியா.
5. ப. பரமேஸ்வரி
   ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

www.padippakam.com



# வவுனியாவில் பேரணி

1999 யூன் இரண்டாம் திகதி வவுனியா நகரை அதிரவைத்த பேரணி ஒன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் நடாத்தப்பட்டது.

★ வேண்டாம்! வேண்டாம்!! யுத்தம் வேண்டாம் பசியால் வாழும் எங்களுக்கு பாஸ் என்னும் விலங்கா??

★ இயக்கங்களே ஐக்கியப்படுங்கள்!!

★ சகோதரப்படுகொலைகளை நிறுத்துங்கள்

ஆகியவற்றைப் பிரதான கோசங்களாக வைத்து இந்தப் பேரணி நடைபெற்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், விவசாயிகள், பெண்கள், அரச ஊழியர்கள், மதகுருமார், வர்த்தகர்கள், ஊழியர்கள் என சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடியில் ஆரம்பித்த இந்த ஊர்வலம் சுமார் 5கிலோ மீற்றர் தூரத்திற்கு நகரத்தைச் சுற்றி நகரசபை மைதானத்தை வந்தடைந்தது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் சிவசக்தி ஆனந்தன் தலைமை தாங்கினார். வவுனியர் பங்குத்தந்தை நவரட்ணம் அடிகளார், குடியிருப்பு விநாயகர் ஆலய பிரதமகுரு கந்தசாமி ஐயர், வர்த்தகர் சங்கத்தலைவர் பி.எஸ். அப்துல்லா, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தர் கோ. நடேசபிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

கட்சியின் சார்பில் கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களும், மத்திய குழு உறுப்பினர் ஸ்ரீதரன், கட்சியின் முக்கியஸ்தர் விசாகப்பெருமாள் ஆகியோர் உரையாற்றினர். கட்சியின் முக்கியஸ்தர் சிவம் அவர்கள் நன்றி உரை வழங்கினார்.

நவரட்ணம் அடிகளார் உரையாற்றும் போது இயக்க ஐக்கியத்தை வலியுறுத்தி மக்கள் இந்த ஊர் வலத்தில் பங்குப்பற்றியதற்குப் பாராட்டுத் தெரிவித்ததோடு இவ்வாறு மக்கள் பங்குபற்றும் போராட்டங்கள் தமிழ்மக்களின் அபிலாசைகளில் பலவற்றைச் சாதிக்க உதவும் என்று குறிப்பிட்டார்.

கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ்பிரேமச்சந்திரன் அவர்கள் உரையாற்றிய போது தொடர்ச்சியாக இத்தகைய போராட்டங்கள் நடத்தப்படவேண்டியதன் அவசியத்தையும் இயக்கங்கள் ஐக்கியப்பட்டு நடக்க வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார். அத்தோடு மக்களின் கோரிக்கைகள் அடங்கிய ஜனாதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய மகஜரை அங்கு வாசித்தார்.

கடும் வெய்யிலிலும் பல்வேறு போக்குவரத்து நெருக்கடி மத்தியில் மக்கள் பெருமளவில் பங்குபற்றியது மக்கள் போராடத் தயாராக இருக்கிறார்கள் என்பதையே கோடிட்டுக் காட்டியது.

நீண்ட காலத்தின் பின் வவுனியா நகரில் நடைபெற்ற மிகப்பெரிய பேரணி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேரணியை அடுத்து வவுனியா நகரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாஸ்கெடுபிடிகளில் கணிசமான அளவு தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியாவில் நிரந்தரமாக வதிவோர் நலன்புரி நிலையங்களில் வாழ்வோர் மற்றும் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வருவோருக்கான அனுமதி வழங்கப்படுவதில் படை அதிகாரிகளும், சிவில் நிர்வாக அதிகாரிகளும், சிவில் நிர்வாக அதிகாரிகளும் கணிசமான அளவுக்கு விதிமுறைகளைத் தளர்த்த நடவடிக்கை எடுத்தமையானது பேரணியில் கலந்து கொண்ட மக்களின் குரல் செவிமடுக்கப்பட்டமைக் கான ஒரு சான்றாகும்.




கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் உரையாற்றுகையில்.



பேரணியில் செயலாளர் நாயகம், மத்திய குழு உறுப்பினர்கள், தோழர்கள், மற்றும் பொதுமக்கள்



பேரணியில் மாணவர்கள் மற்றும் பொது மக்களின் ஒரு பகுதியினர்.



# தோழர் பத்மநாபா 9வது நினைவு தினம்

தோழர் பத்மநாபா அவர்கள் மறைந்து 9வருடங்கள் உருண்டோடி விட்டன. எமது சமூகம் சீரழிவின் விழிம்பில் நிறுத்தப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலை எமது மாபெரும் தலைவர்களின் இழப்பு எத்தகையதென்பதை உணர்த்தி நிற் கின்றது.

எப்போது மாற்று இயக்கங்களை புலிகள் அழிக்கத்தொடங் கினார்களோ அப்போதே எமது சமூகத்தின் அழிவும் ஆரம்பி த்துவிட்டது.

தோழர் பத்மநாபா ஒரு எழிலார்ந்த உலகத்தை கனவுகண் டவர். மாக்சிச கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட தோழர் பத்மநாபா தமிழ், மலையக, முஸ்லீம் மக்களின் ஐக்கியப் பட்ட போராட்டத்தை அவாவி நின்றவர். அதற்கு ஏழைச்சிங் கள மக்களின் ஆதரவு தேவை என்பதையும் உறுதியாக நம்பி னார். அத்தோடு இந்தியா, உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் உறவின் தேவையையும் உணர்ந்திருந்தார்.

தனது இலட்சியங்களுக்காக அவர் வடகிழக்கிலும், மலைய கத்திலும் தென்பகுதியிலும், இந்திய உபகண்டத்திலும் குறிப் பாக தமிழகத்திலும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர். நம்பிக்கைகளைத் தவிடுபொடியாக்கும் மிகமிக இக்கட்டான சூழ்நிலைகளில் கூட அவர் மனம் தளர்ந்து விடவில்லை தனது இறுதி மூச்சுவரை உழைத்தார். அவர் இலங்கையில் தமிழ் மக்களின் வழிகாட்டியாக, ஆசானாக மாத்திரமிருக்க வில்லை அவர் உபகண்டத்தின் போராளியாக இருந்தார்.

மனிதநேயமும்,ஜனநாயகப் பண்பும் அதிர்ந்து பேசாபை யும் அவரின் அருங்குணங்கள். அத்தைகய ஒருவரின் இழப்பு இன்றுவரை எமது சமூகத்தில் வெற்றிடமே.

தமிழ்மக்கள் பல்லாயிரக்கணக்கில் தமது உயிரை இழந்த நிற்கின்றார்கள் பலகோடிக்கணக்கான சொத்துக்களை வீடு வாசல்களை இழந்து அகதிகளாகியிருக்கிறார்கள். அத்துடன் ஆம் அவர்கள் மாபெரும் தலைவர்களையும் இழந்துள்ளார்கள்

இந்த இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்தில் தமிழ்க்கட்ச களும், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் தலைமைகளும், சமூகத்தி முற்போக்காளர்களும் இணைந்து ஒரு தலைமைத்துவத்தை உருவாக்கவேண்டும். அதுவே இத்தகைய மாபெரும் தலைவ களுக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.